விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 கார்த்திகை 22 ராபி அவ் 24 இதழ் 300
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-12-1985

### மூளைக்காய்ச்சல்

## 10 பேர் பலி!

(அநுராதபுரம்)

அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் மூளைக்காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்டவர்களில் பத்துப்பேர் நேற்று மரணமானுர்கள்!

இருபது பேர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கெக்கிராவ, கலாவெவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே மூளைக்காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டு இருநாட்களுக்கு முன்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

### உபதபாலதிபர் மகன் விடுதலை

(வவனியா)

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட ஓமந்தை உபதபாலதிபரும் அவரது மகனும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

★ சிங்களம்-தமிழ் ஆட்சி மொழி ★ ஆளுநர், முதலமைச்சர் ★ தனியான சட்டசபை, நீதிமன்றம் ★ முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம்

# 'மொழிவாரி மாநிலம்' அமைப்பு!

# தமிழர்கூட்டணி மாற்றுயோசனை

## மாநிலத்தின் கையில் சட்டம், ஒழுங்கு, கல்வி, காணி, பாதுகாப்பு

(சென்னை)

**இலங்கையில் கூட்டாட்சி அமைப்பின் கீழ் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்குப்பகுதிகளை இணைத்து, 'மொழிவாரி மாநிலம்' ஒன் ற அமைக்க வேண்டும் என்று இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வாக தமிழர் விடுதலைக்கூட்டணி சமர்பித்த மாற்று யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது!**

இந்த யோசனையை தமிழர் விடுதலைக்கூட்டணி சென்றவார இறுதியில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் சமர்பித்திருந்தது. இதன் விபரம் நேற்று சென்னையில் வெளியிடப்பட்டது.

இவ்வாறு அமைக்கப்படும் மாநில அமைப்புக்கும், மத்திய கூட்டாட்சிக்கும் இடையில், தெளிவான வரையறைகள் இருக்கவேண்டும் என்றும் மாநிலங்களுக்கு சட்டம், ஒழுங்கு, கல்வி, நிலம், பாதுகாப்பு சம்பந்தமான முழுஅதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் அந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது.

''சிங்களமொழியுடன் தமிழும் இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனிப்பட்ட ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படுவதுடன் தனிப்பட்ட சட்டசபை, நீதிமன்றம், துணைநீதிமன்றம் ஆகியவை அமைக்கப்படுவதுடன் அந்த மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் ஒருமுதலமைச்சர் தலைமையிலான மந்திரி சபையிடம் இருக்கவேண்டும்'' என்றும் அந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கவும் இந்த யோசனையில் கூறப்பட்

(9ம் பக்கம் பார்க்க)

### சீனவில் இம்முறை 'புலி' ஆண்டு

(பீக்கிங்)

சீனவின் புதியஆண்டுக்கான சின்னம் 'புலி' யாகும். இதையொட்டி 1986ம் ஆண்டு சீனவின் பொது நிகழ்ச்சிகள், மற்றும் கலைகலாசார கொண்டாட்டங்களில் எல்லாம் புலிச்சின்னம் முக்கியத்துவம் பெற்றிருக்கும்.

சீன மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ''உறுதியும் வீரமும்மிக்க புலியைப் போன்று வாழ்க'' என்று வாழ்த்துக்கூறிக் கொள்வார்கள்.

### கண்காணிப்புக் குழு வெலிக்கடை விஜயம்

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தது.

அங்கு சுமார் நாலரை மணி நேரம் தங்கியிருந்த இக்குழுவினர் சிறைச்சாலை ஆணையாளர் மற்றும் அதிகாரிகளை முதலில் சந்தித்துப் பேசினார்கள். பின்னர் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளை பார்வையிட்டதுடன், அவர்களிடம் பலவிடயங்களையும் கேட்டறிந்தனர்.

சிறைக்கைதிகள் கொடுத்த கோரிக்கைகளை தாம் கவனத்தில் எடுப்பதாக கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர்

### சுங்க அதிகாரிகள் பதவிநீக்கம்

[கொழும்பு]

பிரதி சுங்க அதிகாரி திரு எஸ். செல்வரட்ணம், உதவி சுங்க அதிகாரி திரு. எஸ். தெய்வேந்திரம் ஆகிய இருவரும் தமது பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் கட்டுநாயகா விமான நிலையத்திலிருந்து கடத்திச் செல்லப்படவிருந்த பத்து லட்சம்அமெரிக்க டாலர்கள்சம்பந்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு இவர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கடத்தலில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்று சொல்லப்படும் ஐந்து வெளிநாட்டவர்களுக்கு தலா

(12ம் பக்கம் பார்க்க)

### சாம்பியன் வடமராட்சி

(யாழ்ப்பாணம்)

உரவாரத்தையொட்டி, திட்டஅமுலாக்கல் அமைச்சின் யாழ். திட்டமிடல் பணிமனையினுல் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த மூன்று

(9ம் பக்கம் பார்க்க)

### நாகேஸ்வரராவ் ஆஸ்பத்திரியில்

(சென்னை)

ஒரு காலத்தில் தமிழ்திரைப்படங்களில் வெகு செல்வாக்குப் பெற்றிருந்தவரும், ஆந்திர நடிகருமான திரு. ஏ. நாகேஸ்வரராவ் இருதயக் கோளாறு காரணமாக சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்

(9-ம் பக்கம் பார்க்க)

### வெளியேற்ற உத்தரவு?

(லண்டன்)

அகதிகள் அந்தஸ்துக் கோரி லண்டனுக்குச் சென்றுள்ள இலங்கைத் தமிழர்களில் ஒருசிலருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியேற்ற உத்தரவு வழங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

● தப்பியோட முயன்றனராம்

# இராணுவமுகாமில் வைத்து பத்துப்பேர் சுட்டுக்கொலை!

(கொழும்பு)

திருமலை மாவட்டத்தில் உள்ள பாலதோப்பூர் பகுதியில் நேற்று அதிகாலை பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு சேருவில இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட பத்துப்பேர் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்!

எஸ், விஜயகமூர்த்தி, எஸ். கந்தசாமி, பி. நடேசபிள்ளை, எஸ். கனகரத்தினம், கே.

(9ம் பக்கம் பார்க்க)

## நெசவாளர் தேவை

மின்தறியில் வேலை செய்வதற்கு, கைத்தறி/மின்தறியில் முன் அனுபவம் உள்ளவர்கள் தேவை. இம்மாதம் 14-ம், 15 ம், 16-ம் திகதிகளில் காலை 9-00 மணிக்கு நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் அளிக்கவும்.

குறிப்பு:- தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.

முகாமையாளர்.

SRIRAMS WEAVING [PVT.] LTD.
KONDAVIL ROAD,
IRUPALAI
KOPAY.

2185

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான பெரிய கிடாரம், இட்டலி சட்டி, அசையாமணி, திருவாசி தீபம், தூபம், ஸ்தூபி, சரவிளக்கு, சருவக்குடம், செம்பு, குத்துவிளக்கு, விக்கிரகம், சிலுவை, வைன்கப் முதலியவை கட்டு தொடர்பு: ஸம்ஸ், 26/B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2182

தளபாடங்கள் றேடியோ கஸட், றேடியோக்கள், வெளிநாட்டு கிளாஸ்கள், கோப்பைகள், டிஸ்கள், சைக்கிள்கள், குளிர்சாதனப்பெட்டி, T. V., வீணை மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. எஸ். பத்மநாதன், C/o அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. (திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக் குமிடையில்) . 2206

## தேவை

றேடியோ, ரி. வி டெக், திருத்துவதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. தங்குமிடவசதி இலவசமாக வழங்கப்படும். உடன் நேரில் வரவும். முகவரி: ஸ்ரான்லி பேணிச்ச பலஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2181

பெறுமதிமிக்க பழைய' புதிய உள்ளூர் தபால் தலைகள் மற்றும் பெரியார்கள் ஞாபகார்த்த வெளியீட்டு தபால் தலைகளும் பெறுமதிக்கு பெற்றுக்கொள்ளப்படும். வைத்திருப்போர் அறிவிக்கவும்: விளம்பர இல. 2200 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 2200

நல்ல நிலையிலுள்ள Ladies Bicycle தேவை. 90/4, கல்லூரி வீதி, நீராவியடி. 2207

## வகுப்புகள்

A/L Day Class ஆரம்பம் 9-12-85. Bond Institutes 274/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2203

## தவறிவிட்டது

எட்வேட் பரமானந்தன் ராஜா என்னும் பெயருடைய 272341966 V இலக்கமுடைய எனது அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 18/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். 2201

## சேவை

தட்டச்சு உரிமையாளரே! ஓர் நற்செய்தி! உங்கள் நிறுவனத்தில், வீட்டில் தட்டச்சு யந்திரங்கள் பழுதாகிவிட்டதா? இன்றே உடன் தொடர்புகொள்க: Q.T.R.C. சாந்தி சினிமா முன்பாக, J. E. C. மேல்மாடி, யாழ்ப்பாணம். (2119)

பிள்ளையார்கதை விரதத்தை முன்னிட்டு அழகிய விநாயகர் ஸ்ரிக்கர் ஒன்றை 20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் நீலசோப் புதிய விலை ரூ.2/- மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். 2176

## FOR SALE

For immediate Sale PX 150 Italian Vespar Sccoter in topping condition 84 Sri for sale. Please contact: S. Parmeswara, 22, Hospital Road, Koddady, Jaffna. Telephone: 22192. (2186)

## படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தில் சிக்கிய ஒருவர் படுகாயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரந்தனையைச் சேர்ந்த செல்லப்பா தவராசா என்பவரே படுகாயமடைந்தவராவார்.

## WANTED

CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

1. An Honours Graduate or Graduate in English to teach English in the A/L classes.
2. An English Trained Teacher.
3. A Tamil Trained Teacher.

Retired Teachers may also apply.
Please apply before 15-12-85 to The Principal.
(2144)

## LONDON (ADVANCED LEVEL) 1986

London க. பொ. த. உயர்தர வகுப்புக்கள்
ஆரம்பம்: JAN. 7th 1986.

* Physics * Pure Maths * Botany
* Chemistry * Applied Maths * Zoology
* Accounts * Economics
* Commerce

NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane, (Opp. O. L. R. Church),
Hospital Road, Jaffna.
Telephone: 24355

## 1-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் இந்துஜன் சிவகுமார்

திரு. சிவகுமார் கோணேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் இந்துஜன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (7-12-85) சனிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அத்தைமார், மச்சான்மார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் நயினாதீவு நாகபூசணி அம்மன் அருள்பெற்று நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர். 2180

## TENDER NOTICE

Kilinochchi Co-operative Milk Production and Sales Society calling Tenders for the purchase of following items. Please send your quotation before 20-12-85 to the below mentioned address:-

1. Centriguges, Electrically operated anglehead, having 6 x 15 Ml. Tubes speed adjustable up to 2800 R. P. M. —1 No.
2. Waterbaths, series R and V R with Thermostatic regulation from + 25 0 C to + 100 0 C Width 350— Depth 100 —1 No.
3. Deep Freezer (180 C.M. x 70 C. M. x 48 C.M.) with Compressor —1 No.
4. Bottle Cooler (Large size) —1 No.
5. Milk Cans — (40 Lit. Capacity) uninsulated —25 Nos.
6. Canteen Table 36'' x 36'' Frames in Metal Plywood backed Formica Top. —5 Nos.
7. Chairs, Painted Frame work, seat padded and covered in leather cloth. Back rest intube metal —20 Nos.

PRESIDENT
Kilinochchi Co-op. Milk P and S. Society Ltd., Kilinochchi.
3-12-85. (2177)

## BRITE SOAP

### விலை குறைப்பு அறிவித்தல்

தேங்காய் எண்ணெய் விலை குறைந்துள்ளமையால் எமது தரமான உற்பத்தியான

Brite Soap இன் விலையை

பாவனையாளர்களின் நன்மை கருதிக் குறைத்துள்ளோம்.

| பழைய விலை | புதிய விலை |
|---|---|
| ரூ. 2.75 | ரூ. 2.25 |

வர்த்தகர்களே!

எமது பிரதிநிதிகள் அடுத்தமுறை தங்களிடம் விஜயம் செய்யும்போது விலைமாற்ற ஒழுங்குகளைச் செய்து கொடுப்பார்கள்.

### பிறைற் சோப்

நிர்வாகத்தினர்,
TURBOW COMMERCIAL - MALL KAM
(2178)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### கேள்வி பத்திர அறிவித்தல்

1986 ம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் மகப்பேற்று நிலையங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 19-12-85 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 18-12-85 ம் திகதி புதன் கிழமை பி. ப. 3.00 மணி வரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப் பத்திரக்கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்

இதன் கீழ்க் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரப்பகுதி,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
04.12.85. 2191

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி நீற்று போல்

தோற்றம்:
06-04-1937



மறைவு:
07-12-1984

ஓராண்டின் முன் எம்மைப் பிரிந்து
இறைவனைச் சேர்ந்து நிலைபெற்றீர்.
எங்கள் யாவரிலும் அள்ளிச் சொரிந்த
அன்பின் இனிய நினைவுகள்
மறந்திடற்கரியதாய் எம்முடன் உள்ளன.

பாசத்துடன் உங்களை நினைவுகூரும்:
அன்புக் கணவன், மம்மி, சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்.

33, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். 2184

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

தாவடி சிவசக்தி சன சமூக நிலையத்தில் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. க. சுந்தரலிங்கம், செயலாளர்; திரு. மு. சிவநாதன், பொருளாளர்: திரு. மு. கமலதாஸ், உபதலைவர்: திரு. அ. பேரின்பநாயகம், உபசெயலாளர்: திரு. இ. திருக்கருணைநாதன், உபதுணைதிகாரி: திரு. சி. இராசேந்திரன், கலைச் செயலாளர் திரு. இ. பொன்ராசா ஒன்பது பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரியப்பட்டுள்ளனர்.

## தென்மோடி நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

இன ஒதுக்கல் கொள்கையை கண்டித்து இத்தாலி தேசத்து சமயமறுமலர்ச்சிக்காக உழைத்த புனித பிரான்சீஸ் அசேசியார் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு கவிஞர் தேவதாசனால் எழுதப்பட்ட ''புனித பிரான்சீஸ்'' தென்மோடி நாட்டுக்கூத்து அண்மையில் யாழ், கொழும்புத்துறை புனித பிரான்சீஸ் சேவியர் குருத்துவக்கல்லூரி மாணவர்களால் அக்கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. (ஆ)

### உலகின் 20 சதவீத

# தெற்காசிய மக்கள் குறித்த 'சார்க்' மகாநாடு ஆரம்பம்!

(டாக்கா)

**தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பு மகாநாடு இன்று பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் ஆரம்பமாகின்றது. பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் இம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்கின்ருர். பங்களாதேஷ் உட்படப் பூட்டான், நேபாளம், மாலைதீவு, இலங்கை, பாகிஸ்தான், இந்தியா ஆகிய ஏழு நாடுகள் இதில் கலந்துகொள்கின்றன.**

தெற்காசியப் பிராந்தியத்தில் பொருளாதாரம், கல்வி, கலாசாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், விளையாட்டு ஆகிய துறைகளில் போதியளவு ஒத்துழைப்பினைக் கொண்டிருப்பதே இந்த 'சார்க்' மகாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு (South Asian Regional Ccoperation) என்பதால் இது 'சார்க்' அமைப்பு என்று அழைக்கப்படுகிறது.

உலகின் சனத்தொகையில் 20 சத வீதமான மக்கள் இத்தெற்காசியப் பிராந்தியங்களிலேயே வாழுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மக்கள் தொகையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதே இந்த 'சார்க்' அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

அணிசேராக் கொள்கையின் அடிப்படையிலேயே இந்த 'சார்க்' அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் இம்முதலாவது டாக்கா உச்சிமகாநாடு, மேற் குறிப்பிட்ட ஏழு பிராந்திய நாடுகளிடையேயும் சமஅளவிலான ஒத்துழைப்டைச் சகல துறைகளிலும் கொண்டிருக்க வழி வகுக்கும் என்று இந்தியப் பிரதமரும், அணிசேரா இயக்கத்தின் தலைவருமான திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

## 60 மோட்டார் கார்கள் 70 மோட்டார் சைக்கிள்கள்

டாக்கா, டிச-6

'சார்க்' மகாநாட்டிற்குவரும் உலகத் தலைவர்கள் மற்றும் அவர்களது பரிவாரத்தினருக்கென 60 நவீன மோட்டார் கார்களைப் பங்களாதேஷ் அரசாங்கம் இறக்குமதிசெய்துள்ளது.

இத்தலைவர்களின் பாதுகாப்புக்கருதி டாக்கா பொலிஸ் படைக்கு 70 மோட்டார் சைக்கிள்களும், 85 ரோந்து வாகனங்களும்கூட இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன. இந்த வாகனங்கள் அனைத்தும் ஜப்பானிலிருந்தே இறக்குமதிசெய்யபட்டட்டுள்ளன.

சார்க் மகாநாடு 'ஜட்டியா சன்சார்ட் பவான்' என்ற பங்களாதேஷ் பாராளுமன்றக் கட்டிடத்தில் இடம்பெறுகின்றது.

இம்மகாநாட்டை யொட்டிய கலைநிகழ்ச்சிகளுக்கென ஒஸ்மானி ஞாபகார்த்த மண்டபம் என்ற பெயருடன் பெரும் கலையரங்கமொன்று கட்டப்பட்டுள்ளது. 1,200 பேர் இதனைக் கட்டுவதில் ஈடுபட்டனர்.

இக்கலையரங்கத்தில் 180 கலைஞர்கள் கலைநிகழ்ச்சிகளை வழங்குவார்கள். இவர்களில் இந்தியப் பாடகி லதாமங்கேஷ்கார், நடிகர் அமிதாப்பச்சன் ஆகியோரும் அடங்குவர். (கி)

### சென்னை மீனவர் தகராறு:

## வள்ளங்களின் மறைவில் சமூகவிரோதச் சம்பவங்கள்!

### பொலிஸ் தகவல்

சென்னை. டிச 6,

சென்னைமீனவர்கள்கடற்கரையோரங்களில் நிறுத்திவைத்திருக்கும் வள்ளங்களின் மறைவில் சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவதாகவும் ஆகையினாலேயே தாம் அவற்றைக்கைப்பற்றியதாக சென்னைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சென்னை மீனவர் பிரச்னை தொடர்பாக பொலிஸார்கைப்பற்றிய வள்ளங்களை திருப்பி ஒப்படைக்கும்படி இந்திய சுப்ரீம் கோர்ட் தமிழக அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து விளக்கமளித்தபோதே தமிழகப் பொலிஸ் பகுதி மேற்கண்டவாறு தெரிவித்தது.

மீனவர்கள் நலன்கருதி மகளிர் இயக்கமொன்றும் வேறு ஸ்தாபனங்களும் சுப்ரீம் கோர்ட்டில் இம்மனுவைத் தாக்கல்செய்திருந்தன.

சுப்ரீம் கோர்ட் இம்மனுவை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைத்ததுடன், மீனவர்களிடம் வள்ளங்களை மீண்டும் வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது.

சென்னை மீனவர்களின் வள்ளங்களின் மறைவில் சமூக விரோத சம்பவங்கள் இடம்பெறுவதாகவும், இதனாலேயே சூழல் பாதுகாப்புக்கருதி அவ் வள்ளங்களையும் வலைகளையும் தாம் கைப்பற்றியதாகச் சென்னைப் பொலிசார் தெரிவித்தனர். (கி)

## உலகச் செய்திகள்

பூட்டான் மன்னர் ஜிக்மே சிங்கிய வாங்சக், நேபாள மன்னர் பிரேந்திராபிர் பிக்ரம் ஷாதேவ், பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல்ஹக், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இலங்கை அதிபர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, மாலைதீவு ஜனாதிபதி மவூம் அப்துல் சயூம், பங்களாதேஷ் அதிபர் ஜெனரல் மொஹமட் எர்ஷாத் ஆகியோரே இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும் உலகத் தலைவர்களாவர்.

இன்று 7ந் திகதியும், 8ம் திகதியும் டாக்காவில் இம்மகாநாடு இடம்பெறும். (கி)

## தமிழர் அழிப்பை நிறுத்தினால்தான் பேச்சுவார்த்தை!

### கூட்டணி பிரமுகர்கள் கருத்து

(புதுடில்லி)

தமிழ்மக்கள் அழிக்கப்படுவது நிறுத்தப்பட்டு பார்நிறுத்தம் முழுமையாகவும் மனப்பூர்வமாகவும் செயற்படுத்தப்பட்டால் மாத்திரமே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை என்ற நிலைமை உருவாக முடியும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு தலைவர்களான திரு. எம். சிவசிதம்பரமும் திரு. சம்பந்தனும் இங்கு தெரிவித்தனர்.

இந்திய அரசின் வெளியுறவுக் காரியதரிசி மற்றும் வெளியுறவு கொள்கை அமைக்கும் குழுத்தலைவர் திரு. பார்த்தசாரதி ஆகியவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின் நேற்று முன்தினம் சென்னைக்குத்திரும்பும் வேளையில மேற்படி இக்கருத்தை இருதலைவர்களும் வெளியிட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றுர்.

இந்திய பிரதமமந்திரி டாக்காவிலிருந்து திரும்பும் வரை இந்திய அரசு புதிதாக ஏதும் இலங்கைத்தமிழர் விடயமாக நடவடிக்கையில் இறங்கமாட்டாது எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

## அம்புலன்ஸ் கிடைத்தது

(வவனியா)

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர்இனந்தெரியாதவர்களினுல் கடத்திச் செல்லப்பட்ட மல்லாவி அரசினர் ஆஸ்பத்திரிக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டி மீண்டும் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த அம்புலன்ஸ் வண்டி வவனியாவிலுள்ள சுகாதார அத்தியட்சகர் அலுவலகத்தில் வைத்து ஒரு மாதத்துக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே.


## உங்கள் தேவை? எங்கள் சேவை!

### சமுத்திரா மல்ரி சேவிசஸ் வழங்கும்

## திருமண சேவை

எங்களிடம் ★ டாக்டர்கள் ★ எஞ்சினியர்கள் ★ B. Sc. ★ B. A. ★ T. A. ★ பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ★ வங்கி ஊழியர்கள் ★ வர்த்தகர்கள் ★ விவசாயிகள் ★ தாரமிழந்தோர் ★ விதவைகள் ஆகிய பலதரத்திலும் ஆண், பெண் இருபாலாரிலும் மணமக்கள் இருக்கிருர்கள். உங்கள் தேவைகளுக்கு நேரடியாகவோ கடிதமூலமோ தொடர்புகொள்ளுங்கள்.

உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இதர சேவைகள்:

★ காணி, வீடு வாங்க, விற்க விரும்புவோர்,

★ கட்டிடங்கள் கட்டுதல், திருத்துதல் போன்ற வேலைகள் மேற்கொள்ளவிருப்போர்,

★ மின்சார உபகரணங்கள், தளபாடங்கள் வாங்க, விற்க விரும்புவோர் நேரடியாகவோ, கடிதமூலமாகவோ தொடர்புகொளளுங்கள்.

முக்கிய அறிவித்தல்

எமது தலைமைச்செயலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இல்லாதவர்கள் எமது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்ல என்பதைத் தெரியத்தருகிறேம்.

தொடர்புகொள்ளுங்கள்:

## சமுத்திரா மல்ரி சேவிசஸ்

முருகமூர்த்தி லேன்,
நெல்லியடி -- கரவெட்டி.

தலைமைச்செயலகம்:

303, பலாலி ரோட்,
கோண்டாவில் சந்தி — கோண்டாவில்.


# யுனெஸ்கோவிலிருந்து பிரிட்டன் வெளியேற்றம்!

நியுயோர்க், டிச 5

ஐ.நா ஸ்தாபனத்தின் கல்வி, கலாசார, சமூக, விஞ்ஞான அமைப்பான 'யுனெஸ்கோ'விலிருந்து பிரிட்டன் விலகிக்கொண்டது. பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் திரு. திமொத்தி ரெய்ஸன் இந்த வெளியேற்றத்தைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு அமெரிக்கா 'யுனெஸ்கோ'வில் இருந்து வெளியேறியதைப் பின்பற்றியே பிரிட்டனும் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

'யுனெஸ்கோ' அமைப்பு இடதுசாரிகள் சார்பான அரசியல் தலையீடுள்ளதொன்ருக மாறிவருவதாக பிரிட்டன் குற்றஞ்சாட்டியுள்ளது. இதனாலேயே இதிலிருந்துதான் விலகுவதாக அது அறிவித்தது.

இந்த வெளியேற்றத்தின் மூலம் 'யுனெஸ்கோ'விற்கு பிரிட்டன் வருடந்தோறும் வழங்கும் 6 கோடி பவுண்கள் நிதிஉதவியை நிறுத்திக்கொள்ளும். ஆயினும் இந்த உதவியை மூன்ரும் உலக நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களில் தான் தொடர்ந்துசெலவிடப்போவதாக பிரிட்டன் கூறியுள்ளது.

பிரிட்டனின் இந்த வெளியேற்ற நடவடிக்கை மூன்ரும் உலக நாடுகளை அவமதிப்பதாகவும், பாதிப்படையச் செய்வதாகவும் உள்ளதென 'யுனெஸ்கோ' அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின் காரணமாகவே இந்த வெளியேற்ற நடவடிக்கையை பிரிட்டன் மேற்கொண்டது என பிரிட்டிஷ் எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். [கி]

## சட்டவிரோத மின்பாவனை: புலிகள்இயக்கம் எச்சரிக்கை!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத மின்பாவனையாளர்களால் தோன்றியுள்ள அபாய நிலைகுறித்து 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக மாதாந்தம் 'தமிழீழ விடுதலைப்புலி'களால் வெளியிடப்பட்டுவரும் 'களத்தில்' என்னும் பத்திரிகையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுந்தமானமாக எதையுமே கருத்திற் கொள்ளாது பெறப்படும் சட்டவிரோத மின்பாவனையால் ''மின்மாற்றி'' வெடித்துப்பழுதுறுவதால் எம் மண்ணுக்கே மின்சாரமின்றிப்போகும் அபாயநிலைமை தென்படுகின்றது. இது பல இடங்களில் சம்பவித்தும் இருக்கி

(11ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

ஜனநாயக அரசு என்று சொல்லப்படுவதில் முட்டாள்கள் அயோக்கியர்களைத் தங்களை ஆளத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

— பெர்னட்ஷா

# நமது நோக்கு

## டில்லி தொடக்கம் டாக்கா வரைக்கும்

இலங்கை உச்சிமாநாடு எங்கெங்கு எல்லாம் செல்கிறது!

டில்லியில் உருவான சீ அநுபந்தம் இலங்கை ஏ பி சி யில் கை கழுவப்பட்டது. ஏ பி சி வெறும் பிசுபிசுப்பில் முடிந்தது.

காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தியின் ஆட்சி சட்டென மறைந்ததும் இலங்கைத் தமிழ் மக்களின் அவநம்பிக்கை அதிகரித்தது.

அவருடைய மறைவு இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஈடுகொடுக்கமுடியாத இழப்பென்பதைக் கடந்த வருடம் நடந்த மரணவைபவ நிகழ்ச்சிகள் விளக்கின.

பிரதமர் ராஜீவ் உடனடியாகப் பிரதமரானதும், அதனைத் தொடர்ந்த பொதுத் தேர்தல் வெற்றியும் தமிழ் மக்களுக்குத் தெம்பூட்டின.

அரசியல்வாதிகள் அனுவசியமான அச்சங்களை ஆராய்வது ஒரு தனிப் பண்பு.

தேர்தலில் இவ்வித வெற்றி பெற்ற பிரதமர் ராஜீவுக்கு இலங்கை நெருக்கடி ஒரு அவசர காரியமாக இருந்திருக்காது என்பது ஒன்று.

தமிழ் நாட்டு ஆட்சி புதிய பிரதமருக்குச் சவால் விடுவது சாத்தியமில்லை என்றும் கருதப்பட்டது.

இந்த அச்சங்களுக்கு அர்த்தமளிக்குமளவில், இன்றைய இந்திய ஆட்சி, குறிப்பாகப் பிரதமர் ராஜீவ் இலங்கை உச்சியை டில்லியிலும், பாமாஸிலும் நடத்தினார்.

டில்லியில் கருவான நட்பு அன்று இருவரும் - ராஜீவும் ஜே. ஆரும் - டாக்காவுக்குச் சென்றபோதே உருவெடுத்தது. 'போர் நிறுத்தம்' என்ற பிரகடனம் அந்த உச்சியிலே முடிவானது.

பாமாஸில் நடைபெற்ற பொதுநல நட்பு மாநாட்டில் இந்தக் 'குட்டி உச்சி' எதனையும் உருப்படியாக முடிவுகட்டவில்லை.

அன்றுதொட்டு இன்று வரைக்கும் போர் நிறுத்தம் என்பது கண்காணிப்புக் குழுவின் அறிக்கைகளில் இலை மறை காய் போல் காணப்படுகிறது.

வடக்கிலும் கிழக்கிலும் அப்பாவிமக்கள் கொல்லப்படுவது தொடர்கின்றது.

கிழக்கில் நடைபெறுவது வடக்குக்கு மீண்டும் பரவுமானால் போர் முடியுமென்பது அர்த்தம். ஜனாதிபதியின் தீர்க்கதரிசனமாகவும் கூடும்.

வருட முடிவில் 'பயங்கரவாதம்' முற்றாக அழிக்கப்படும் என்று திடமாகச் சொல்கிறார் ஜனாதிபதி.

சற்றேனும் அமந்து போகாத பயங்கரவாதத்தை முற்றாகத் துடைத்துவிடுவதானால் அங்கு வாழும் தமிழர்கள் அனைவரையும் ஒழித்துக் கட்டவேண்டுமென்று ஆலோசனை கூறுவதாக ஜனாதிபதி சொல்லியிருக்கிறார்.

"அது முட்டாள்களின் ஆலோசனை என்று கண்டித்திருக்கும் ஜனாதிபதி எல்லோரும் பயங்கரவாதிகளல்ல ஒரு சிலரே" என்று பதிலளித்திருக்கிறார்.

இந்த அடிப்படையில் டாக்காவில் இன்று நடக்கவிருக்கும் ஒரு மணித்தியால 'இலங்கை உச்சி' நிச்சயம் 'சார்க்' (SARRC) அங்குரார்ப்பணத்துக்கு எவ்வகையிலும் அபசகுனமாகாது.

தெற்காசிய பிராந்திய மாநாட்டில் மிகப் பெரிய தேசம் இந்தியா. தனது அயல் நாடுகளுடன் நட்புக் கொள்வதே இந்திய வெளிநாட்டுக் கொள்கையின் மிக முக்கியமான அம்சம். எனவே அதற்கு முன் நடைபெறும் இச் சந்திப்பில் இருவரும் சமாதானமான கருத்துக்களையே பரிமாறுவர்.

இந்த அமைதியான பரபரப்பற்ற சந்திப்புக்கள் இலங்கைத் தமிழருக்குத் தொடரும் இடரை உடனடியாகத் தீர்க்கமுடியுமா? இந்திராவின் தொலைபேசி 'உங்கு நடைபெறும் கொலைகள் நிறுத்தப்படவேண்டும்' என்று ஒலித்தபோது ஜனாதிபதி ஜெயவர்த்தன அதற்கு செவிசாய்த்தார் என்ற அபிப்பிராயம் இன்று மகனின் பொறுமை இழுபறியை வளர்க்கிறதே! என்றகண்டனத்தில் தெரிகிறது.

'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு' என்பது அரசியலிலும் காணப்படும். இவ்விருவரின் நோக்கம் ஒன்றே, ஸ்டைல்தான் வேறு.

இந்திய அரசியல் நிபுணர்கள் பாகிஸ்தானைவிட மற்றைய பங்களாதேசும் இலங்கையும் நட்பு நாடுகளாகும் சாத்தியம் அதிகரித்திருப்பதாக கணிக்கின்றனர்.

ஒருமணித்தியால உச்சி உடனடித் தீர்வைக் கொடாது.

தமிழ் மக்களின் பிரதிநிதிகள்- அரசியல் தலைவர்களும், போராளிகளின் தலைவர்களும் எவ்வகையிலும் ஒருமித்து இந்தியப் பிரதமரின் மத்தியஸ்தத்துக்குப் பலமளிக்கவேண்டும்.

போர் நிறுத்தம் வெறும் போலியாகும், இலங்கை அரசு தன்னுடைய ராணுவத்தை எங்காவது பூட்டி வைத்தால், யார் மீறுகிறார்கள் என்பது தெளிவாகும்,

அப்பாவி மக்களைத் தயக்கமின்றிச் சுடுவது அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டால் ஒரு பெரும் மாற்றம் நிச்சயம் ஏற்படும்.

ஜனாதிபதி, காலத்துக்குக் காலம் இடத்துக்கு இடம் முரண்பட்ட கருத்துக்களை விமர்சித்தபோதும் இதற்கொரு முடிவு காணமுயல்வதில் நாம் அவநம்பிக்கை கொள்வது விவேகமல்ல.

அதே சமயம் சுமுகமான முடிவுக்கு தமிழ்பிரதிநிதிகள் ஒத்துழைப்பது இன்றியமையாதது. நம்பிக்கை இழப்பது அனைவருக்கும் தோல்வியே!

# சகலகலாவல்லவன் தேவனை நினைக்கிறோம்

## நாளை நினைவுதினம்

தேவனைப்பற்றி அறிந்தவர்கள் எல்லோரும் அவர் ஒரு 'சகலகலாவல்லவன்' என்றே கூறுவர். பேச்சுக்கலை தேவனின் கைவந்தகலை. "தேவன் தமிழ் இனிக்கும்" என்று பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம் தன் கவிதையிலே குறிப்பிடுகிறார். எழுபதுகளில் ஈழம் முழுவதும் பொருந்தொகையான பட்டி மன்றங்களும் வழக்காடு மன்றங்களும் நடைபெற்றன. தேவன் பங்கு கொண்ட, தலைமை தாங்கி நடத்திய இம்மன்றங்களெல்லாம் கலகலப்பாகவே அமைந்தன. தேவனுடைய பேச்சு என்றால் மக்கள் எல்லோரும் விரும்பிக் கேட்டனர். மக்கள் அன்றாடம் பேசும் மொழியினை வெகுலாவகமாகத் தேவன் மேடையிலே கையாண்டார். 1982ல் அவரைக் கௌரவிப்பதற்காகக் கம்பன் கழகம் ஒரு விழாவெடுத்தது. நோயின் காரணமாக இரண்டு தடவை ஆபத்தான நிலைகளைத் தாண்டியிருந்த தேவன் அவ்விழாவிலே பேசும்போது: "நான் இண்டைக்கு வருவனெண்டு நினைச்சிருக்கேலை. பாஸ்போட் றெடி, விசாவும் குத்தியாச்சு, Flight இல்லை. இடமில்லையெண்டு கலைச்சுப் போட்டினம் முந்தியுமொருக்கா இப்படித்தான் பாஸ்போட் எடுத்து விசா எடுத்து வெளிக்கிடுகிற நேரம் திரும்பி வந்தனான். இனி திருப்பி உந்த இரண்டையும் எடுத்தால்தான் மற்ற அலுவல் நடக்கும்." என்று பேச்சுமொழியிலே சபையோர் கவனமெல்லாம் தன்பக்கமிழுத்துப் பேசினார். எல்லாக் கூட்டங்களிலும் அன்றாடப் பேச்சுமொழியை நன்குபடுத்தினார். பேச்சு மொழி தேவனிடம் பேச்சுமொழியற்று.

பேச்சுக்குகந்த குரல் வளத்தை அவர் பெற்றிருந்தார். இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் கலைஞர்களை அறுமுகஞ் செய்ய நடன அரங்குகளுக்கும் நாடக அரங்குகளுக்கும் தேவன் குரல் அழகூட்டியது.

"வெண்கலக் குரலைமேலே
எடுத்திடை நிறுத்தி நின்றே
பெண்களும் விரும்பும் வண்ணம்பேசிடத் தேவன்இல்லை,
நண்பருக் கினியன் எல்லா
நாட்டுக்கும் இனியன் நல்ல
பண்பினும் கொருவன்
மேடை ஏறுநாள் இனிமேல்
இல்லை"

என்று அமரர் வித்துவான் சி. ஆறுமுகம் தேவன் பிரிவை எண்ணிப்பாடிய பாடல் தேவனின் பேச்சுத்திறனையும் நட்புத்திறனையும் வியக்கின்றது. அக்காலத்தில் தேவன் வித்துவான் சி. ஆறுமுகம், திரு. க. சிவராமலிங்கம், வித்துவான் ந. வேலன் ஆகியோருடன் கம்பன் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்களான திரு. ஜெராஜ், திரு. நந்தகுமார் போன்றோர் மேடையிலே தோன்றிவிட்டால், அது கலகலப்பான மேடையாகிவிடும்.

தேவனுடைய இலக்கியக் கலைத் திறமையினை அவர் எழுதிய சிறுகதைகளும் நாவல்களும் வெளிப்படுத்தும், 'கேட்டதும் நடப்பதும்', 'வாடியமலர்கள்', 'மனிதல்லவல்' ஆகிய நாவல்கள் நூல் வடிவிலே வெளிவந்துள்ள. 'தென்னவன்பிரமராயன்' என்னும் நாடகநூல் ஈழத்துத் தமிழ் நாடகஇலக்கியத்துக்குத் தேவனுடைய பங்களிப்பாகும். நாடகக்கலை தேவனுக்கு இன்னொரு கைவந்த கலை, 'கற்புக் கனல்' 'இரு சகோதரர்கள்', 'கூடப் பிறந்த குற்றம்', 'பத்தினியா பாவையா?', 'நள தமயந்தி' என்னும் நாடகங்களை எழுதி மேடையேற்றிப் புகழ் பெற்றவர் தேவன். அவருடைய நாடகத்திறன் சில வேளைகளில் மேடைப் பேச்சுக்கும் உதவியுள்ளதை அவருடைய பேச்சுக்களைக் கேட்டவர்கள் அறிவர். நாடகமொன்றினைப் பார்த்துவிட்டு எவ்வித பக்கச் சார்புமில்லாமல் நயத்துடநே விமர்சிக்கும் திறனைத் தேவனிடம் கண்டு மகிழ்ந்தவர் பலர்.

தேவனுக்குப் புகழீட்டிக் கொடுத்த மற்றுமொரு கலை மொழிபெயர்ப்புக் கலையாகும். ஆங்கில மொழியினைத் தமிழுக்கும், தமிழ் மொழியினை ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்ப்பதிலே தேவன் ஈடிணையற்று விளங்கினார். நயம்படவுரைக்கும் நாவினையுடைய தேவனுக்கு தமிழும் ஆங்கிலமும் சேவை புரிந்தன என்று கூறுவதே பொருத்தம்.

இத்தகைய சகலகலா வல்லவன் நல்ல பண்புடையவராகவும் வாழ்ந்து சென்றுள்ளார். சேவை அவருடன் ஒன்றிவிட்டதொன்றுஎனப்பலருங் கூறுவர். அவர் மற்றவர்களுடன் கொள்ளுத் தொடர்பு ஆத்மீகமானது. தேவனுடைய நட்பு இத்தகையது. தனும் சன்னதப்பட்டு மற்றவர்களையும் சன்னதப்படுத்தும் சக்தி தேவனின் இன்னொரு சிறப்புப் பண்பாகும். இது பற்றி திரு. ந. சபாரத்தினம் "தேவன் இன்று எங்கிருந்தாலும், அங்கு கலகலப்பாகவும் குதூகலத்துடனும் அந்தச் சூழ்நிலையைச் சன்னதப் படுத்திக் கொண்டுமே இருப்பார்" என்று மிகப்பொருத்தமாகக் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கலைவளர்ச்சியிலே தேவனுக்கும் ஒரு தனியான இடமுண்டு. புனைகதை எழுத்தாளராக, சமூக விஞ்ஞானக் கட்டுரையாசிரியராக, நாடக நூலாசிரியராக, நடிகராக, சுவைஞராக, விமரிசகராகத் தேவன் ஆற்றிய பணிகள் அவரை வரலாற்றில் ஒருவராக ஆக்கியுள்ளன. மக்கள் கலைஞன்,என அவரைக் குறிப்பிடுதல் சாலப் பொருந்தும். இலக்கிய ரசனையையும் நாடக ரசனையையும் சாதாரண மக்களுக்கு ஊட்ட முனைந்தவர் தேவன்.அவர்அமரராகிமூன்று ஆண்டுகள் கடந்து விட்டன.

"நாடகங்கள் நடக்கும்
அரங்கம்
நாட்டியங்கள் புரியும்
அரங்கம்
பாடகர் இசை கூட்டும்
அரங்கம்
பண்டிதர் வாதம்செய்யும்
அரங்கம்
பாடசாலை விளையாட்
அரங்கம்
பாவலர்கவி சொல்லும்
அரங்கம்
வாடி நிற்க மறைந்தனன்
தேவன்
வயழ்க அன்னவன் நாமம்
பல்லாண்டே"

[காரை. செ. சுந்தரம்பிள்ளை]

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## பிள்ளையார் கதை



இருபத்தோராம் நாளாகிய விநாயக சஷ்டி தினத்தில் தேய்வப்பெண்கள் எழுவரும் ஆலமரத்தின் கீழ் இருந்த ஆலயத்தை மெழுகிக் கோலமிட்டு தோரணம் தூக்கி அலங்கரித்து விசேட அபிஷேகம் பூசை என்பன செய்து வழிபட்டனர். இவற்றையெல்லாம் பாம்புருவில் இருந்தவாறே கவனித்த திருமால் அத்தேவப் பெண்களின் உதவியுடன் விநாயகசஷ்டி விரதத்தினை அநுட்டித்தார். விநாயகப் பெருமானின் அருளால் திருமாலின் சாபம் நீங்க அவர் கபிலைக்குச்சென்று பார்வதி பரமேஸ்வரரைத் தொழுதார்.

திருமால் ஏன் உமை வென்றபோது சிவன் வென்றதாகச் சொன்னார். சிவபெருமானுக்காக திருமால் 'சிவன் வென்றார் என்றுசொன்ன போது உமையிட்ட சாபத்திலிருந்து திருமாலைக் காப்பாற்ற சிவபிரான் ஏன் முனையவில்லை? என்னும் கேள்விகள் பலருக்குச் சாதாரணமாக எழுவது இயற்கை.

சிவபெருமான் கூத்தாடினென்ன- சூதாடினலென்ன அவர் செயல் எல்லாம் உயிர்கள் பொருட்டு செய்யும் பஞ்சகிருத்தியமயாகும். சிவனது பஞ்சகிருத்தியங்களில் சிவபெருமானது வல்லமையாகிய சக்திக்கு உரிய முதன்மை வெளிப்படும் வகையிலேயே விளையாட்டில் உமையம்மையார் வெற்றி பெற்றார். ஆனால்;

"சிவனை உமை வெல்ல முடியுமா? வேதம் முதலிய சாஸ்திரங்கள் எல்லாம் சிவனது முதன்மையே கூறுவதால் நான் காண்பது சரியா? இது உண்மையா],, என்றெல்லாம் சிந்தித்து திருமால் மனம் குழம்பினார். இப்படியான குழப்பத்தின் விளைவை அநுவிக்க வேண்டியது திருமாலே யாதலால்தான் சிவனும் உமையும் தாம் தாம் வென்றதாகக் கூறித் திருமாலிடம் தீர்ப்புக் கேட்டன திருமாலும் சிவன் வென்றார் என்று கூறிச் சாபமும் பெற்றார்.

விநாயக விரதச்சிறப்பால் திருமால் தன் குழப்பம் தீர்ந்தபடியால்தான் உமை தனக்குச்சாபம் இட்டது- தனக்காகச் சிவபெருமான் பரிந்து பேசாது எல்லாம் நியாயமே என உணர்ந்து கயிலையில் இருவரையும் பணிந்தார்.

-அருளாளன்

## பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு ஸ்ரீ விநாயகர் ஆலய மண்டபத்தில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் யோகாசனப்பயிற்சி வகுப்பினை நடாத்தி வருகின்றனர்.

இவ்வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பிரிவும் நோயாளர்களுக்கு ஒரு பிரிவுமாக இரு பிரிவாக நடைபெறுகின்றது. (ப)

# விழிப்புலனற்றோர் சங்கம் அளிக்கும் அரியவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சிகிச்சை செய்வதற்கு வசதியற்ற நிலையில் இருக்கும் கண் பார்வையற்றோர் மற்றும் பார்வைக் குறைபாடுடையவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் யாழ். றோட்டறிக்கழகத்தினரின் முற்று முழுதான ஆதரவுடன் கண்பரிசோதனைமுகாம் ஒன்றினை நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

இம்முகாமில் கலந்துகொள்பவர்களுக்கு வைத்திய சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில் இலவசமாகவே வழங்கப்படும். இம்முகாமில் கலந்து கொள்ள விரும்புவர்கள் தமது முழுப்பெயர், வயது, நிரந்தர முகவரி, கண்பார்வையின் தன்மை, தனது தற்போதைய நிலை முதலிய விபரங்களுடன் செயலாளர், யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கைதடி என்ற முகவரிக்கு இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளலாம். முகாம் நடைபெறும் திகதி, இடம், நேரம் என்பன பற்றி பின்னர் நேரடியாகவும், பத்திரிகை வாயிலாகவும் அறிவிக்கப்படும். (ஐ)

## தேன்பொழுது நூல் வெளியீடு

(புலோலி)

திரு. பொன். பூலோகசிங்கம், டாக்டர் கனக. சுகுமார் ஆகியோரின் தேன்பொழுது பல்துறை சார்ந்த பத்தொன்பது கலைஞர்களின் செவ்வித் தொகுப்பு வெளியீட்டு விழா பருத்தித்துறை பர்வத கலாவர்த்தனி மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமையில் நடைபெறும். திக்கவயல் தர்மகுலசிங்கம் அறிமுகவுரை நிகழ்த்த முதற்பிரதியை திரு. அ. நாகரட்ணம் பெறுவார். கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் பண்டிதர் வீ. பரந்தாமன் திரு. செ. யோகராசா, திரு. து. குலசிங்கம் செல்வி சந்திரா தியாகராஜா ஆகியோர் ஆய்வுரை வழங்குவதைத் தொடர்ந்து நூலாசிரியர்கள் உரையாற்றுவர். திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம் நன்றி கூறுவார், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## கிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் உதவி

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் அண்மையிலேற்பட்ட வன்செயல்களின் போது அகாலமரணமடைந்த வியாபாரி மூலையைச் சேர்ந்த மகாலிங்கம் என்பவரின் குடும்பத்திற்கு வீடு ஒன்றைக் கட்டிக் கொடுக்கவுள்ளது. இவ் வீட்டை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாச்சிரமத்தின் ஏழைகளுக்கான இலவசமருத்துவ சேவைத் திட்டத்தின் கீழ் எதிர்வரும் முதலாம் திகதி ஏழைகளுக்கான இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்படவுள்ளன பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். ஆனந்தராஜா வைத்திய சிகிச்சை வழங்குவார்.

## புதிய தலைவர்

(வண்ணார்பண்ணை)

தீவுப்பகுதி சமநலச்சேவைக் குழுவின் தலைவராக இக்குழு உறுப்பினர் திரு. கு. க. நடராஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வேலணையில் அமைந்துள்ள சமத்தொழிற்சேவை நிலையத்தில் இயங்கும் இக் குழுவின் பிராந்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. குழந்தைவேலு தலைமையில் இத் தெரிவு நடைபெற்றது.

புதிய தலைவரான திரு. நடராஜன் மண்டைதீவு பயிர்ச் செய்கைக்குழுவின் பிரதிநிதியாக நீண்டகாலம் இக்குழுவில் அங்கம் வகித்து வருபவராவர்.

மண்டைதீவுக் கிராமசபையின் தலைவராகவும் இருந்து வந்த இவர், மண்டைதீவு கிராமோதயசபை, கிராம அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம், ஆலய பரிபாலனசபை ஆகிய பலபொது ஸ்தாபனங்களில் முக்கிய பதவிகள் வகித்து பொதுப்பணியாற்றியவராகும்.

## நாவாந்துறை சென்.மேரிஸ் ச. ச. நிலையம்

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தின் புதிய நிருவாகிகள் தெரிவு நிலைய மண்டபத்தில் வண கட்டளைக் குரவர் ஜீ. எம். இம்மனுவேல் அடிகள்தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருடத்திற்கான நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் டானியல் அன்ரனி, உபதலைவர் ம.அருமைத்துரை, செயலாளர் நீ. அருளானந்தம், உபசெயலாளர்வீ. யான்சன், பொருளாளர்ம.சிந்தாத்துரை, விளையாட்டுத் தலைவர் அ. மகேந்திரன், கலைஅரங்கத் தலைவர் ம.செ. மைக்கல்தாசன், சுகாதார அதிபர் அ.யோண்பாஸ்கல், ஆன்மீகத் துறைத் தலைவர் யோ. சந்தியோ, வாசிகசாலை அதிபர் அ. சந்தியாப்பிள்ளை, கல்வி அதிபர் ஆ. சூசைதாசன். நிர்வாக முழுவுக்கு மேலதிக உறுப்பினர்களாக திரு. ம. டானிசியல், திரு. செ.யோ. வீரசிங்கம், திரு. ச. மரியநாயகம், திரு. ச. யோன்பீற்றர் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## குடிநீர்வழங்க நடவடிக்கை

[நெடுந்தீவு]

திட்டமிடல் பகுதியினுல் நெடுந்தீவு மத்தி, கிழக்குப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குவதற்கான குழாய்கள் பொருத்துவதற்கான வேலைகள்ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இதற்கான நிதி உதவியை சனடா அரசாங்கம் நெடுந்தீவுக்கென முன்னர் முன்னுள் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் முயற்சியின் பேரில் வழங்கியிருந்தது. இதற்கான நிதி சுமார் பத்துலட்சம் ரூபாவாகும்.

## மறை ஆசிரியர் பயிற்சிநெறி

[பண்டத்தரிப்பு]

யாழ். மறைக்கல்வி நிலையம் நடத்தும் 1986-ம் ஆண்டிற்கான மறை ஆசிரியர் பயிற்சி நெறி ஜனவரிமாதம் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிபெற விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள்பகுதி பங்குத்தந்தைக்குஊடாக எதிர்வரும் 15-ம் திகதிக்கு முன்னர் யாழ். மறைக்கல்வி நிலைய இயக்குநருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நயினைக்கரைகளில் மணல்களவு

[நயினுதீவு]

கடற்கரைப் பிரகேதசங்களில் களவாக மணல் ஏற்றப்பட் வருவதால் நயினுதீவுக்குள் கடல் புகும் அபாயநிலை ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது.

களவாகமண் ஏற்றுவோருக்குத் தண்டனை வழங்கப்படுமென விடுக்கப்பட்ட அறிவிப்பின் பின்னரும் இச்செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

## சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயைச் சேர்ந்த திரு. தனஞ்சயன் சேனுதிராஜா பிரதம நீதியரசர் எஸ், சர்வானந்தா மற்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்களான பேர்சி கொலின் தொமி, பரிந்த ரணசிங்க ஆகியோர் முன்னிலையில் சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

பதில் நீதவான் சர்மையாப்பிள்ளை சேனுதிராஜா ஸ்ரெலா ராஜவதி தம்பதிகளின் கனிஷ்ட புல்வரான இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் மேற்கொண்டார். இக்கல்லூரியின் சிறந் விளையாட்டு வீரரான திரு. தனஞ்சயன் சட்டபீடக் கல்லூரி தமிழ் மாணவ மன்றச் செயலாளருமாவார். சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இவர், 1984-ல் கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்குத் தலைமை வகித்தார். ஹாக்கியிலும் சிறந்து விளங்கினர்.

## மக்கள் வங்கி அதிகாரிகள்

மக்கள் வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. என். சரவணபவானந்தன் உதவிப் பொது முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று மக்கள் வங்கியின் கொழும்புத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். பிரதேச வடபிரதேச முகாமையாளராகத் திரு சிவசிதம்பரம் பதவியேற்றுள்ளார்.

புதிய முகாமையாளராகத் திரு, கணேசசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்,

வடபிரதேச உதவிப் பிரதேச முகாமையாளராகக் கடமை புரிந்து வந்த திரு,கே, சுப்பிரமணியம் மட்டக்களப்புப் பிரதேச முகாமையாளராசப் பதவியுயர்வு பெற்றுச் செல்கிறுர்,

பதவி உயர்வு பெற்று இடமாறுச செல்பவர்களையும், புதிதாசப் பதவியேற்பவர்களையும் கௌரவிக்கும் முகமாக வடபிரதேச மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் அண்மையில் மதியபோசன விருந்துபசாரம் அளித்தனர். (ஐ)

## சீருடை கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் கடமையாற்றும் அரசாங்க மருந்துக்கலவை யாளர்களுக்கு 1985ம் ஆண்டிற்கான உத்தியோக பூர்வ சீருடைகள் இதுவரை வழங்கப்படவில்லை என்றும் இவற்றை விரைவில் வழங்க ஆவன செய்யுமாறும் அரசாங்க மருந்துக்கலவையாளர் சங்க யாழ் கிளையின் செயலாளர் திரு. என். எம். சந்தசாமி யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நயினை அம்பாள் பூசை: சமரச உடன்பாடு

(நயினுதீவு)

கடந்த மாத முற்பகுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைக்கும் பரம்பரைக்குருக்கள் மாருக்கு மிடையே நிலவி வந்த பிணக்குகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன இரு சாரருக்கு மிடையே ஏற்பட்ட உடன்பாட்டினைத் தொடர்ந்து ஆலய நித்திய பூசை செய்யும் உரிமை கடந்த 25ம் திகதி முதல் ஆலய பரம்பரைக் குருமார்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.

பூசை செய்யும் உரிமை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நயினுதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் சபை ஏற்பாடு செய்த சங்காபிஷேக வைபவத்துடன் பிரம்மஸ்ரீ சா. பரமேஸ்வரக்குருக்கள் ஆலய பூசையை மீண்டும் பொறுப்பேற்று நடாத்தி வைத்தார். இவ் ஆலய நித்திய பூசையை தொடர்ந்து இப் பரம்பரைக் குருமார்களே செய்து வருவார்கள்.

# பொதுக்கலைப் பட்டத் தேர்வு: பதிவாளருக்கு மாணவர் அனுப்பியுள்ள மகஜர்

[யாழ்ப்பாணம்]

1985-ம் ஆண்டுக்கான பொதுக் கலைப் பட்டத் தேர்வுக்கு வடக்கிலிருந்து விண்ணப்பித்துள்ள வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சையை யாழ்ப்பாணத்திலேயே நடத்தும்படி கோரி பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரித் தேர்வுகள் உதவிப் பதிவாளருக்கு மேற்படி மாணவர்கள் மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர். மகஜரில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது:-

மேற்படி தேர்வுக்கு யாழ்ப்பாணம் ஒரு தேர்வு நிலையமாக அமையும் என்று பல்கலைக்கழகம் விண்ணப்ப அறிவுறுத்தல்களில்குறித்திருந்ததால் யாழ்ப்பாணத்தில் தேர்வு நடக்கும் என்ற நம்பிக்கையில் நாம் தேர்வுக்குவிண்ணப்பித்தோம்.

ஆனல் அண்மையில் தேர்வு யாழ்ப்பாணத்தில் நடைபெருது எனத் தாங்கள் அறிவித்ததனுல் நாம் பெரிதும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம் என அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேர்வு நடத்தமுடியாத அளவுக்கு நாட்டு நிலை சீராக இல்லை என்ற உங்கள் நிலையை நாம் புரிந்துகொள்கிறோம். ஆனல் சீராக இல்லாத நாட்டு நிலைச் சூழலில் நாம் பேராதனைக்கு அல்லது கொழும்புக்கு வந்து தேர்வு எழுதவேண்டும் என்று நீங்கள்ஆணையிடுவது எவ்வாறு தார்மீக நிலைப்பட்ட கட்டளை என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உங்கள்கடிதம் கிடைத்ததும் நாம் எமது நிலையை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு எடுத்துரைத்து நிவாரணம் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டோம். அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமும் உங்களிடமும் தொடர்புகொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உத்தரவாதத்துடன் தேர்வினை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்வதாகக் கூறினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தேர்வைப் பொறுப்பேற்றுச் சீரியமுறையில் நடத்த முன்வந்தும், கடந்த காலங்களில் எல்லாம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இத்தேர்வைச் சிறப்பாக நடத்தியிருந்தும் இம்முறை 1984ற் போல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தேர்வை நடத்துவதற்கான நிலையமாக அங்கீகரிக்க பேராதனைப் பல்கலைக்கழகம் மறுத்துவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

நாட்டு நிலை உகந்ததல்ல என்று நீங்களே மனப்பூர்வமாக உணர்ந்தநிலையில் தங்குமிட வசதி, பிரயாண வசதி எதுவுமற்ற நிலையில் நாம் கொழும்புக்கு அல்லது பேராதனைக்கு பரீட்சை எழுதுவது சாத்தியமில்லை என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்தில் தேர்வை நடத்த ஏற்பாடு செய்வேன் என யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்தே நம் தேர்வில் தோற்றும் விருப்பத்தைத் தெரிவிக்கும் தங்கள் கடிதத்தை திருப்பி அனுப்பினேமே தவிர கொழும்பில் அல்லது பேராதனையில் தேர்வுக்குத் தோற்றுவதற்கான சம்மதக் கடிதமாக அதனை அனுப்பவில்லை என்பதனைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

அக்கடிதத்தில் 'அனுப்பினுலும் அனுப்பாவிட்டாலும் கொழும்பில் தேர்வு நடைபெறும்' என குறிப்பிட்டிருந்ததால் நாம் அதனை அனுப்ப நிர்ப்பந்திக்கப்பட்டோம். சம்மதித்துவிட்டு நியாயத்துக்கு கோரிக்கைவிடும் மரபையொட்டியே அவ்வாறு செய்தோம்.

ஆகவே, 'தேர்வு நாடிகளுக்காகவே தேர்வு' என்ற உயர்ந்த தத்துவத்தை ஏற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்தில் தேர்வை நடத்துமாறு பணிவோடு வேண்டுகிறோம்.

## பாடசாலை முன்மாதிரி

(மன்னுர்]

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவின் 10 கோடி மரம் நடும் இயக்கத்திற்கு ஆதரவு அளிக்கும் முகமாக தாராபுரம் எல் மினு மகா வித்தியாலயம் நாற்றுக்களை விநியோகிக்கவுள்ளது.

அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் வேம்பு, இப்பில் இப்பில், புளி, இலுப்பை ஆகிய நாற்றுக்களை விநியோகிக்கவுள்ளதாக வித்தியாலய அதிபர் ஜனுப் எச். சித்தீக் தெரிவித்துள்ளார். இதற்காக இப்போதே நாற்று மேடைகளைத் தயாரித்து குறிப்பிட்ட மரங்களின் வித்துக்களை மாணவர்கள் நாட்டியுள்ளனர்.

## மண்டைதீவு இணக்க சபை

(மண்டைதீவு)

மண்டைதீவில் இணக்க சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் : திரு. நா. இராஜலிங்கம், உப தலைவர்.- திரு. சா. தொப்பியாஸ், செயலாளர்: திரு. த. சிவபரஞ்சோதி, உப செயலாளர்; திரு. கு. சிவகுலசிங்கம், பொருளாளர்: திரு. க. இராஜநாயகம், செய்தித் தொடர்பாளர் திரு. கி. ஜெய்சிங்கம், நிர்வாக உறுப்பினர்களாக திரு. இ. சந்தையா, திரு. தி. பஞ்சாட்சரம், திரு. சி. வைரவநாதன், திரு. செ. அ. தேவராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இலங்கை
தொழிலாளர்
காங்கிரஸின் பிரகடனம்

# 1986 சமாதானம், நட்புறவு தேசிய சமரசம் நிலவும் ஆண்டாக அமையட்டும்

1985 டிசம்பர் 3-ம் திகதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின்
தேசிய மற்றும் செயற்குழு அதன் தலைவர்

தேசிய மற்றும் செயற்குழு அதன் தலைவர்

# திரு-எஸ்-தொண்டமான் (பா. உ.)

## தலைமையில் கூடி நிறைவேற்றிய பிரகடனம்

**இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை 1985 டிசம்பர் 3ஆம் திகதி கூடி தற்பொழுது தோட்டத் தொழிலாளரையும், இந்நாட்டு மக்களின் ஏனைய சகல பிரிவினரையும் பெரும் பீதியில் ஆழ்த்துகின்ற ஆபத்துக்கள், இன்னல்களிலிருந்து விடுவிக்க உருப்படியான சாத்தியக்கூறுன நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டதெனத் தீர்மானித்தது.**

### இ. தொ. கா.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேதகு ஜே. ஆர். ஜயவர்தன அவர்களின் அரசாங்கத்தில் சேர்ந்து மிகவும் இக்கட்டான காலகட்டத்திலே ஏனைய பிரச்னைகளுடன் சிறப்பாக இனப்பிரச்னையைத் தீர்த்து வைக்கும் என்ற எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் ஒத்துழைப்பு நல்கியது. தமிழ் வம்சாவளியினரான 4,00,000 தோட்டத் தொழிலாளர்களின் நாடற்ற நிலைமையும் இதில் அடங்கும். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து எட்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆனுல் இவையும் ஏனைய பிரச்னைகள் பலவும் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கின்றன. இவையெல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் அமைதியையும். பாதுகாப்பையுமே விரும்புகின்றனர். ஆனுல் அவர்களுக்கு அமைதியும், பாதுகாப்பும் இப்பொழுது கிடைக்கவில்லை.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தவுடனேயே இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்கத் தவறியதால், வேருனதொரு தமிழ் இராச்சியத்தை ஸ்தாபிப்பதற்கென ஆயுதம் தாங்கிய, வன்செயல்களில் ஈடுபடும் ஒரு தீவிரவாத இயக்கம் தோன்ற வழியேற்பட்டது. வன்செயலை அறவே ஒழிப்பதற்கு முன்நடவடிக்கையாக எடுக்கப்படவேண்டிய சிங்கள, தமிழ் இனங்களிடையே நிலவும் கருத்துவேறுபாடுகளை அகற்ற எடுத்த சகல முயற்சிகளும் இதுவரை வெற்றி காணவில்லை. இதன் விளைவாக இன்று தமிழர் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பயங்கரவாதிகளென்று அழைக்கப்படுகின்ற ஆயுதம் தாங்கிய தமிழ் தீவிரவாதிகளினுல் பாதுகாப்புப் படையினர் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும், பதிலுக்குப் பாதுகாப்புப் படையினர் அப்பாவிப் பொதுமக்கள்மீது தாக்குதல்களை நடத்துவதோடு, அவர்களுக்கெதிரான அதிகார வரம்புமீறிய வன்செயல் சம்பவங்களினுல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

### கிழக்கு, வடக்கு மாகாணங்களின் வாழ்க்கை நிலை

நடந்திருப்பவைகளுக்கு எவரையும் குற்றஞ்சாட்டவோ பொறுப்புக்கூறவோ இதுநேரமல்ல. ஆனுல் வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் வாழ்வு முற்ருகப் பாதிக்கப்பட்டிருக்கிறதென்ற உண்மையிலிருந்து நாம் தப்பிவிடமுடியாது. இதே நிலைமை தோட்டப்பிரதேசங்களிலும் உருவாகும் அறிகுறிகள் காணப்படுவது எம்மைப் பெரிதும் குழப்புகின்றது. இதிலும் பார்க்க அதிகம் கலவரத்தை ஏற்படுத்தும் விஷயம் என்னவென்ருல், தமிழர் எல்லோருமே அல்லது அவர்களில் குறைந்தது 99 சத விகிதமானேர் பயங்கரவாதிகளை ஆதரிக்கிருர்கள் என்ற எண்ணத்தைச் சிங்கள மக்கள் பலரின் மனதில் பதிய வைப்பதில் அவர்களிடையே உள்ள தீவிரவாதிகள் வெற்றி கண்டிருப்பதும், அதன் காரணமாக தமிழர்களை அறவே ஒழித்துக்கட்ட யுத்தம் செய்யப்படவேண்டுமெனக் கூறுவதுமாகும்.

இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பெரும் முயற்சி எடுத்துவரும் ஜனுதிபதி ஜயவர்தன அவர்கள் அண்மையில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமிழர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய வெகு சிலரே பயங்கரவாதிகளென்றும், எல்லா தமிழர்களையும் கொன்று குவிப்பதே இனப் பிரச்சினைக்கான தீர்வாகுமென்ற 'முட்டாள்தனமான பிரசாரத்தில்' சிங்கள மக்கள் மயங்கிவிடக்கூடாதென்றும் சொல்லிவைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. சகல தமிழர்களையும் பயங்கரவாதிகளென்று நாமஞ்சூட்டுவதும், அவ்விதம் கணிப்பதும் அவர்களில் அதிகமானேரை அரசாங்கத்துக்கெதிராக செயல்படத் தூண்டும் என சரியாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ்த் தீவிரவாதிகளின் வன்செயல் மூலமோ, அரசாங்க பாதுகாப்புப் படையினரின் வன்செயல் மூலமோ இனப் பிரச்சினையோ, மற்றும் பிரச்சினைகளோ தீர்க்கப்படமுடியாதென்பதை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நன்கு விளங்கிக்கொண்டுள்ளது. அண்ணல் மகாத்மா காந்தியும், உலகின் மதப்பெரியார்கள் அனைவரும் போதித்துள்ள அகிம்சையிலும், சமாதானப் பேச்சு வார்த்தைகளிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நம்பிக்கை வைத்துள்ளது. அரசாங்கம் உடனடியாக எடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை இந்நாட்டின்மீது நல்லெண்ணம் படைத்த ஆண்கள், பெண்கள் அனைவருடனும் இணைந்து பைத்தியக்காரத்தனமான இந்த யுத்தப் பேச்சை நிறுத்தவேண்டியது அவசியமாகும்.

இந்த யுத்தப்பேச்சு 1983 ஜூலை பேரழிவுக்கு தூபமிட்ட சில அரசியல் வாதிகளின் தர்மயுத்த-புனிதயுத்தம் கோஷத்தை நினைவுக்குக் கொண்டுவருகின்றது. இந்த தர்ம யுத்தக் கோஷம் முதல் முதலாக சேருவில புனித நகர அபிவிருத்திச் சங்கத்தினுல் வெளியிடப்பட்ட ''பௌத்த மதத்தைக் காப்பாற்றவும்'' என்ற நூலிலே 201ம் பக்கத்திலே உபயோகிக்கப்பட்டுள்ளது. மீண்டும் இந்தக் கோஷம் எழுப்பப்படுகிறதா? மேதகு ஜே. ஆர். ஜயவர்தன அவர்களின் தார்மீகத் திட்டத்தை முன்வைத்து பாராளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட எவரேனும், இப்பொழுது யுத்தக் கோஷத்தை எழுப்பும்பொழுது அவருடைய ஆசனத்தை இராஜினுமாச் செய்துவிட்டு, அவர் விரும்பினுல் யுத்தத்திற்கு ஆதரவு கோரி மீண்டும் தேர்தல் களத்தில் குதிக்கலாமே என்று கேட்கலாமல்லவா? அத்தகைய போர் பல இனத்தவர், பலசமயதவர், பல மொழி பேசுபவர் வாழும் இந்த நாட்டிலே ஓர் அங்கமாக விளங்கும் ஒரு சமூகத்திற்கெதிராக நடத்தப்படும் போராகும் என்பதால், இந்த யுத்தப் பேச்சும், யுத்தப் பைத்தியத்தை உருவாக்குவதும் மடமைத்தனமானதாகும். தனக்குத்தானே தோல்வியை வருவித்துக்கொள்ளுவதாகும். தற்கொலைக்குஒப்பானதாகும்.

### இ. தொ. கா.வின் பரிகாரம்

நாளுக்குநாள் நிலைமை மிக மோசமாகச் சீரழிந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்நாட்டில் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதை மற்றவர் பொறுப்பில் விட்டு வெறுமனே பார்வையாளராக மேலும் பார்த்துக்கொண்டிருக்க முடியாதென உணர்கிறது. இனப் பிரச்னையைத் தீர்த்துவைக்கும் அரசாங்க முயற்சிகளுக்கு இ. தொ. கா. கடந்த பல ஆண்டுகளாகத் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளது. ஆனுல் பயன்தரக்கூடிய பலாபலன் ஒன்றும் ஏற்படவில்லை. எனவே, இ. தொ. கா. மேலும் தொடர்ந்து, தான் செயற்படாது நிற்கவும், பதிலாக மறுப்புத் தெரிவிப்பதுடன் நிற்கவும் முடியாதெனத் தற்பொழுது உணருகிறது. இரு இனங்களுக்கு இடையிலும் சமாதானத்தையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தக்கூடிய உணர்ச்சிபூர்வமான நடவடிக்கையில் இறங்கும் நிலைப்பாட்டை மேற்கொள்ளவேண்டுமெனக் கருதுகின்றது. நாடு இன்று சகல விடயங்களையும் பொறுத்தமட்டில் ஸ்தம்பித நிலையிலிருக்கிறது. சகல சமூகங்களையும் சேர்ந்த தொழிலாளி, விவசாயி, புத்திஜீவி, வியாபாரி மற்றும் அனைவரதும் தலையாய கடமை அமைதி, நல்லெண்ணம், தேசிய ஒற்றுமையை வளர்க்கும் புதிய சூழ்நிலையை உருவாக்கி அதன்மூலம் சகல பிரச்னைகளையும் தீர்ப்பதாகும்.

### தியானமும் பிரார்த்தனையும்

சமாதானத்தையும், அமைதியையும் நிலைநாட்டத்தக்க அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் சகல சமூகங்களிடையேயும் இ. தொ. கா. எவ்விதமாக உதவலாம் என்பதுபற்றிச் சிறிது காலமாகச் சிந்தித்து வருகின்றது. இவ்வாண்டு ஜூன் மாதத்தில் எமக்கு முன்னுள்ள பணிக்கு இறைவனின் திருவருளை வேண்டி மூன்று நாள் கூட்டுப் பிரார்த்தனைகளை நடத்தியதிலிருந்து, இன்றைய இக்கட்டான நேரத்தில் நாம் மேற்கொள்ளவிருக்கும் பெரும் பணிக்குத் தியானம், பிரார்த்தனைமூலம் எமது சக்தியை வளர்த்துக்கொள்ளவும், சண்டை சச்சரவுகளினுல் அவதிப்படும் நம் நாட்டிற்கு அமைதியையும், சமாதானத்தையும் பெற்றுத்தர நாம் எடுக்கவிருக்கும் அகிம்சா வழி முயற்சிகளுக்கு அவசியமாகவிருக்கும் தியாகங்களைச் செய்ய எம்மைத் தயார்செய்யவும் சிறந்த வழிமுறை இதுவாகும் என்பதில் எமக்குள்ள நம்பிக்கை பெரிதும் அதிகரித்து வருகின்றது.

தேசிய இணக்கத்தை ஏற்படுத்தும் நடைமுறை மூலம் மாத்திரமே அமைதியையும், நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் அடையமுடியும். மனத்தாலும், வாக்கினுலும், செயலினுலும் இந்த நாடு எல்லாச் சமூகங்களுக்கும் சொந்தமானது என்பதை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே இந்த இணக்கம் நனவாகும். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பஞ்சசீலம், தார்மீகம், அமைதி, இணக்கம் என்பனவற்றை மக்களின் சகல பிரிவினருக்கும் எடுத்துக் கூறும், உணர்த்துவிக்கும் அவசியத்தைத் திரிகரண சுத்தியாக உணர்ந்துள்ளது. அமைதிக்கும், ஒற்றுமைக்கும் குந்தகமாக விளங்கும் பாரிய தடைகளில் ஒன்று நாடற்ற நிலைமையாகும். இதனுடன் சாதாரண சட்ட மீறல்களுக்கு உட்படாத காரணங்களின் பேரில் தனிப்பட்டவர் சிலர் மீது விதிக்கப்பட்டிருக்கும் குடியியல் தடைகளும் அடங்கும். நாடற்ற நிலைமை சிங்களத் தோட்டத் தொழிலாளர்களின் கழுத்தில் பூட்டப்பட்டுள்ள சக்கரமாகும். நாடற்றவர் நிலைமை, அரசியற்பழிவாங்கல், 35 வருடங்களுக்குமுன் சட்டரீதியாக்கப்பட்டதினுல் ஏற்பட்ட விளைவாகும். சகல தோட்டத் தொழிலாளரினதும்வாழ்க்கையில் உண்மையான மேம்பாட்டிற்கு நாடற்ற நிலைமை அகற்றப்படவேண்டியது அவசியமாகும்.

எனவே இ. தொ. கா. வின் தேசிய சபை 1986 ஆம் ஆண்டை அமைதி, நல்லெண்ணம், தேசிய இணக்க ஆண்டாக பிரகடனப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இவ்வாண்டில் காலத்திற்கு காலம் அமைதியையும், தேசிய இணக்கத்தையும் நனவாக்குவதற்காக செயற்படுத்தப்படவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கும், இந்த நடவடிக்கைகள் எவ்விதம் மேற்கொள்ளப்படவேண்டுமென்பது பற்றி பணிப்புரைகளும் வெளியிடப்படும்.

### ஆரம்ப நடவடிக்கை

ஆரம்ப நடவடிக்கையாக 1986 ஆம் ஆண்டின் முதலாம் சட்டத்திட்டமாக இ. தொ. கா. தைப்பொங்கலிருந்து தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்பு வரையான 1986 ஜனவரி 14 முதல் 1986 ஏப்ரில் 15 வரை உள்ள காலத்தை தியானம், கூட்டுப்பிரார்த்தனைக்கு அகிம்சா வழி மூலமும், அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலமும் தேசிய இணக்கத்தை அடைவதற்கான எமது போராட்டத்திற்கு அர்த்தபுஷ்டியான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்கும் ஒதுக்க இ. தொ. கா. தீர்மானித்துள்ளது.

தோட்டத் தொழிலாளர் சமுதாயம் முழுவதும் இ. தொ. கா. திட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். நீண்ட நெடுங்காலமாக தொழிலாளர்கள் தாம் அனுபவித்துவரும் கஷ்டங்களுக்கும் ஒதுக்கல் நடவடிக்கைகளுக்குமிடையில் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பெருந்தோட்டத்துறையின் சுபீட்சத்திற்காக தம் வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி உழைத்துள்ளனர். இந்த உழைப்பைக்கண்டு அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து இவர்கள் பயன் பெறுவதால் கண்மூடித்தனமாக ஆதரிக்கிறார்கள் என்று பலர் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இந்த உறவு உண்டு எனக் காட்டப்படும் போலித்தனம் உண்மையானதன்று. இந்த வாதம் தொடர்ந்தும் நிலைநிற்குமாயது. தோட்டம் வாழ் மக்கள் தற்பொழுது தங்களுக்கென ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தவும் இலங்கையின் ஏனைய பிரஜைகள் அனுபவிக்கும் அதே உரிமைகளையும் சிறப்புரிமைகளையும், நன்மைகளையும் அனுபவிக்கவும் விரும்புகின்றனர்.

இதனை அடைய இ. தொ. கா. வகுக்கப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நண்பகல் வரையான காலத்தைப் பயன்படுத்துவர். தியானத்திலும், கூட்டுப்பிரார்த்தனையிலும், ஈடுபடுவர். நிர்வாகத்தினர், தொழிலாளர் சம்பளத்தை இழக்காத விதத்தில் தம்வேலை நேரத்தை — தொழிலாளர்களை வேலைக்கமர்த்தும் நேரத்தை 1985 ஜூன் மாதத்தில் ஏற்பாடு செய்ததுபோல் மாற்றியமைத்து வேலை வழங்கினால் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வர்.

தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டில் அமைதி விரும்பும் அனைத்து மக்களின் ஒத்துழைப்புடன் 1986ம் ஆண்டை அமைதி, நல்லெண்ண, தேசிய இணக்க ஆண்டாக நிலைநாட்டுவதில் வெற்றிவாகை சூடுவார்கள் என்று நாம் அந்தரங்க சுத்தியுடன் நம்புகிறோம்-பிரார்த்திக்கின்றோம்.

## பிரிவு உபசார விழா

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளராகப்பல வருடங்களாகக் கடமை யாற்றி வவனிய வக மாற்றம் பெற்றுச் சென்றுள்ள டாக்டர் கே, மாணிக்கத் துக்கு யாழ், சுகாதாரத்திணை க்கள ஊழியர்கள் அளிக்கும் சேவை நலம் பாராட்டு விழா எதிர்வரும் திகதி சனிக் கிழமை பிற்பகல் யாழ். ஆதி கள் பயிற்சிப் பாடசாலை மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

## உதவி

[யாழ்ப்பாணம்]

யாழ். அகதிகள் முகா மிலுள்ள அகதிகளின் நலன்கருதி கைதடி இரட்சணிய சேனை இல்லம் தலா ஒருமூடை அ ஒரு மூடை மா, பால்மா வகைகள் உட்பட உணவுப் பொருட்களைத் தமிழ் மகளிர் அவைத் தலைவி செல்வி. கு. மேகலா விடம் அன்பளிப்புச் செய்துள்ளது. (ச)





ZENITH

உங்கள் கனவுக் கார், மற்றும் பல அற்புத பரிசுகளை வெல்ல இதோ உங்களுக்கோர் சந்தர்ப்பம்!

நீங்கள் வெல்லும் சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்க ஒவ்வொரு மாதமும் சீட்டிழுப்பு - முதலாவது நவம்பர் 1, இரண்டாவது டிசம்பர் 2, மா பெரும் சீட்டிழுப்பு '86 ஜனவரி 10 ஆகிய தேதிகளில் இடம் பெறும்.

ஒவ்வொரு மாதமும் பின்வரும் பரிசுகளைப் பெற உங்களுக்குச் சந்தர்ப்பம் உண்டு:

1-ம் பரிசு 20'' கலர் டெலிவிஷன்
2-ம் பரிசு 5 கன அடி குளிர்ப் பெட்டி
3-ம் பரிசு தையல் மெஷின்
4-ம் பரிசு கசெட்-றெக்கோடர்
5-ம் பரிசு 2 அடுப்பு கேஸ் குக்கர்
மற்றும் 50 ஆறுதற் பரிசுகள் - ரூ. 650 வீதம்

இவற்றுடன்
மா பெரும் முடிவுச் சீட்டிழுப்பில் பெரும் பரிசாக ஒரு இசுசு 1500 சிசி சொகுசுக் கார் -இலங்கையில் இது போன்ற முதற் கார் இதுவே.

நீங்கள் செய்ய வேண்டியது இதுவே :-
இத்துடன் உள்ள விண்ணப்பத் தாளில் காணப்படும் எளிமையான கேள்விக்கு விடை எழுதி அனுப்ப வேண்டும். விலாசம்-
''லக்ஸ்பிறே போட்டி'' த.பெ. எண் 988, கொழும்பு.
பரிசு பெறுவோர் அனைவரும் தத்தம் பரிசுகளுக்குப் பெறுமதியான ரொக்கப் பணத்தை விரும்பினால் பெற்றுக் கொள்ளலாம்.

LAKSPRAY - உலகின் உன்னத பாற் பண்ணைகளிலிருந்து இறக்குமதியாகிறது.

விரையுங்கள்! மாபெரும் சீட்டிழுப்பின் முடிவு திகதி 31 டிசம்பர்

விதிகள்:
1) எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பின்வரும் முறைப்படி LAKSPRAY என்ற வார்த்தையை வெட்டி இணைக்க வேண்டும்:
800 கிராம் சிக்கன பக்கெட்டில் வெட்டிய 2 "LAKSPRAY" துண்டுகள் அல்லது 500 கிராம் பக்கெட்டில் வெட்டிய 4 "LAKSPRAY" துண்டுகள் அல்லது 250 கிராம் பக்கெட்டில் வெட்டிய 8 "LAKSPRAY" துண்டுகள்.
2) விண்ணப்பத் தாள்கள் பத்திரிகைகளிலும் உங்கள் வியாபாரிகளிடமும் கிடைக்கும். வெற்றுத் தாளில் பிரதி செய்யப்பட்ட விண்ணப்பத் தாள்களும் ஏற்கப்படும்.
3) 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில், முதலில் இழுக்கப்படும் 55 சரியான, துப்புரவான விண்ணப்பங்களுக்கு மேலே குறிப்பிட்ட பரிசுகள் கிடைக்கும். 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில் பரிசு பெறாத விண்ணப்பங்கள் மா பெரும் முடிவுச் சீட்டிழுப்பில் பரிசு பெறத் தகுதியுடையவை. முடிவுச் சீட்டிழுப்பில் முதலில் இழுக்கப்படும் சரியான, துப்புரவான விண்ணப்பத்துக்கு இசுசு கார் பரிசாகக் கிடைக்கும். அடுத்து இழுக்கப்படும் சரியான, துப்புரவான 55 விண்ணப்பங்களுக்கும் 1-ம், 2-ம் சீட்டிழுப்புகளில் போலவே பரிசுகள் கிடைக்கும்.
4) ஒவ்வொரு சீட்டிழுப்பின் பிறகும் பரிசு பெறுவோர் பட்டியல் பத்திரிகைகளில் பிரசுரமாகும்.
5) நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
6) லங்கா மில்க் புட்ஸ் (கூ,மொ.வி.) லிமிட்டெட், அதன் விளம்பரப் பிரதிநிதிகள் ஆகிய நிறுவன ஊழியர்களையும் உடனடிக் குடும்பத்தினரையும் தவிர, இலங்கையில் வசிக்கும் சகலரும் லக்ஸ்பிறே போட்டியில் கலந்து கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கான விசேஷ பரிசுகள்
ஒவ்வொரு சீட்டிழுப்பிலும் முதல் மூன்று பரிசாளரும் குறித்துள்ள வியாபாரிகளுக்குப் பின்வருமாறு பரிசுகள் கிடைக்கும்:-
1-ம் பரிசு ரூ. 2,500/-
2-ம் பரிசு ரூ. 1,500/- 3-ம் பரிசு ரூ. 1,000/-



விண்ணப்பத் தாள்
லக்ஸ்பிறே பக்கெட்டில் எத்தனை பசுக்கள் காணப்படுகின்றன?
பெயர்:
விலாசம்:
வியாபாரியின் பெயர்:
விலாசம்:

Licence No. S/473

# ,,சிவசுப்பிரமணியம் மறைவு பேரிழப்பு!"

(யாழ்ப்பாணம்)

''முன்னைநாள் நீதியரசரும், நாவலர் சபையின் தலைவருமாகிய உயர் திரு. வீரவாகு சிவசுப்பிரமணியம் அவர்களின் திடீர் மறைவு எம்மை அதிர்ச்சிக்கும் ஆற்றொணுக் கவலைக்கும் உள்ளாக்கி விட்டது. எமது சபைக்கு மட்டுமல்ல, சைவத்துக்கும் தமிழினத்துக்கும் வழிகாட்டியாக நேர்மை, நீதி, கருணை, சரியெனப்பட்டதைச் செய்து முடிக்கும் அஞ்சாமை இவற்றை இலட்சியங்களாகக் கொண்டு அவர் செய்த பணிகள் ஏராளம்''

இவ்வாறு, நாவலர் சபை ஆட்சிக்குழு சார்பில், இணைச் செயலாளர்களான திரு. நா. சோமகந்தனும் திரு. கா. விசுவலிங்கமும் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர். அச்செய்தி மேலும் கூறுவதாவது:

''நாவலர் பெருமானின் 107 ஆவது குருபூசையை இருநாட்களுக்கு முன்னர் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கும் முக்கியமாக நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை அமைந்துள்ள நாவலர் பிறந்த இல்லத்தில் அதனைக் கோலாகலமாகக் கொண்டாடுவதற்கும் ஆகவேண்டிய ஆலோசனைகளை நல்கி வழிமுறைகளை வகுத்துத்தந்தமை அவருடைய இறுதிபணிகளாக அமைந்திருந்தன. எமது சபைக்கு அவரைப்போல உத்தம தலைவரைப் பெறுவது அரிது. அவரது இழப்பு நாவர் சபைக்கு மட்டுமன்றி சைவ உலகம் முழுவதுக்குமே ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்''.



## ரூபவாஹினி

மாலை

5-00: செய்திகள்.
5-05: கார்ட்டூன்.
5-10: உடலைப்பற்றி அறித்து கொள்ளுங்கள் [சிங்களம்]
5-30: விளையாட்டு.
6-30: செய்திகள் [தமிழ்]
7-00: 'பிளனட் ஒப் த ஏப்ஸ்'
8-00: செய்திகள்(சிங்களம்]
8-25: தொலைக்காட்சி நாடகம் [சிங்களம்]
9-00: செய்திகள்[ஆங்கிலம்]
9-25: இசைநிகழ்ச்சி
9-50: விறுவிறுப்பூட்டும் நிகழ்ச்சி.
10-40: ஒலிபரப்புமுடிவு.


**உஷாமினி**
இன்று மட்டும்
10-30, 2-30, 4-45, 6-45
ESCAPE TO ATHENA
ஆயுதப் படையினருக்கு எதிரான விறுவிறுப்பான தாக்குதல்கள்

**சரவணபவன்**
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 7-00
Clint East Wood
நடித்த
SUDDEN IMPACT
Adults only

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந் - அம்பிகா
''ஏமாற்றுதே ஏமாறுதே''

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
"SPRING BREAK"
(Adults only)
கொழும்பில் பலநாட்கள் ஓடியது. யாழ். நகரில் முதல் தடவை காண்பிக்கப் படுகிறது. பாலியல் காட்சிகள் நிறைந்த படம்.

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-15, 6-30
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, பாலியல் காட்சிகள், மனிதக்குரங்கின் சாகச விளையாட்டுக்கள் நிறைந்த
TARZAN THE LORD OF APES
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
யாழ். நகரில் முதன் முதலாக காண்பிக்கப் படுகிறது.


## கடைசிநேர வரிவிளம்பரம்


### காணவில்லை

29 ஸ்ரீ 7438 இலக்கமுடைய 764 பாதை பலாலி றூட்டில் சேவையில்ஈடுபடும் மினிவானுடைய காப்புறுதிப் பத்திரமும் சாரதியின் லைசென்சும் 2 அடையாள அட்டையும் காணுமல்போய்விட்டன. கண்டெடுத்தவர்கள் 764 நேரக் கணிப்பாளரிடம் (Time keeper) ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2221)



## வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம்

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் கீழ்வரும் வகையான வெற்றுச் சாக்குகள் விற்பனைக்காக கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்யவிரும்புவோர் தலைவர், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 14-12-1985 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்விப பத்திரம்'' எனக் குறிப்பிடவேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா. 250/- செலுத்துதல் வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும், விண்ணப்பப்படிவத்திற்கான ரூபா. 5/-யும் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உரிய பணத்தை நேரடியாகவோ இன்றேல் தபால் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பிவைத்தால் கேள்வி விண்ணப்பப் பத்திரம் உரியவருக்கு அனுப்பிவைக்கப்படும்.

### வெற்றுச் சாக்கு விபரம்

| | |
|---|---|
| 1. பிறிமா சாக்கு | 047 |
| 2. இழக்கம் | 688 |
| 3. அரிசி சாக்கு (நம்பர்-1) | 270 |
| 4. அரிசி 2½ புசல் | 105 |
| 5. சீனி சக்கு | 282 |
| 6. அரிசி சாக்கு (1 அந்தர்) | 005 |
| 7. சர்க்சரை | 26 |
| 8. சற் ண்டு | 10 |
| 9. நவதானியம் | 48 |
| 10. பை. (சீனி, மா, உப்புப்பை) | 419 |
| மொத்தம் | 3000 |

பொதுமுகாமையாளர்,
1985-12-05. (2205)


## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் கோட்டைக்கு அண்மையில் திறக்சப்பட்டுள்ள மாட்டிறைச்சிக் கடையை மூடும்படி 'தமிழன்டண்டாட்டு விரும்பிகள்' துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இம்மாட்டிறைச்சிக் கடை மூடத்தவறின் போராட்டம் தொடரும் என்றும், அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்து மக்களின் கலை கலாசார பாரம்பரியத்தை படிப்படியாக சீரழிக்கும் ஒரு சதித்திட்டமே ஆகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நாகேஸ்வரராவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

சில தினங்களுக்கு முன் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும், ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு, என். ரி. ராமராவும் திரு. நாகேஸ்வரராவை மருத்துவமனையில் பார்த்தனர்.

## மொழிவாரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

''1981 நவம்பரில் இலங்கையில் வசித்த வெளிநாட்டு பிரஜை அல்லாதவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும். மாநில சட்டசபைகளிலும் பாராளுமன்றத்திலும் தமிழ்ப்பேசும் பகுதிகளைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கும், தமிழ்பேசும் இந்திய வம்சாவழியினருக்கும் போதுமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்'' என்றும் அந்த யோசனையில் கூறப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி இந்தியப் பிரதமரிடம் சையளித்த இந்த யோசனைகளை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இன்று 'சாக்' மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் கையளித்து பேச்சு வார்த்தை நடத்துவார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தயாரித்து அளித்த இந்த யோசனைகள் குறித்து முழுமையாக ஆராய்வதற்காக தமிழர் விடுதலைக்கூட்டணியின் அரசியல் குழு (பொலிட்பீரோ) நாளை சென்னையில் கூடி ஆராயவுள்ளது.

## இராணுவ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கவேல், பி. துரைராசா, கே, சேனுதிராசா, கே. தங்கத்துரை, கே. ஏ. கருணுதாசா, ஆர். எம். ஆர். குணரத்தினு ஆகிய பத்துப்பேருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

பாலதோப்பூர் பகுதியில் நேற்று அதிகாலை பாதுகாப்புப் படையினர் இந்த பத்துப் பேரையும் கைதுசெய்து சேருவில இராணுவ முகாமுக்குக் கொண்டுசென்றனர் என்றும் அங்கு இவர்களில் சிலர் தப்பி ஓட முனைந்தபோது இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோசம் செய்ததாகவும் அப்போது இவர்கள் பலியானதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இறந்தவர்கள் அனைவரும் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள். இவர்களில் எட்டுப்பேர் தமிழர்கள். இருவர் சிங்களவராவர்.

இவர்களிடம் 200க்கும் 300க்கும் இடைப்பட்ட தமிழ் ஈழம் ஆதரவான புத்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும் இருந்தன. 'பொங்கும் தமிழமுதம்' என்ற புத்தகமும் 'புதிய பாதை' என்ற பத்திரிசையும் இதில் அடங்கிருந்தன'' என்றும் அரசு அறிவித்துள்ளது.

இவர்கள் தொடர்பான மரணவிசாரணை மூதூர் டதில் நீதவான் கே. செல்வராசா நடத்தினுர். மரணவிசாரணை முடிவில் நியாயபூர்வமான கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

# "கூட்டுறவுத் தந்தை என்றும் நினைவுகூரத்தக்கவர்

(யாழ்ப்பாணம்)

''அன்றைய கிரேக்க நாட்டிலும், புத்தர் காலத்தில் வட இந்தியாவிலும் இருந்த ஜனநாயகம் போன்று முழுக்க முழுக்க ஜனநாயகம் மிக்க துறையாக விளங்குவது கூட்டுறவுத்துறைஒன்றேயாகும். கூட்டுறவுத்துறையில், 1964-க்கு முன்னர் இருந்த அம்சங்கள் தற்போது இல்லை. தொழிற்புரட்சியின் பின்னரே நவீன தொழில்கள் வளர ஆரம்பித்தன. இதன்பயனுக கூட்டுறவுத்துறையும் ச்சிஅடைய சந்தர்ப்பம் ஏற்பட்டது''

இவ்வறு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற 'கூட்டுறவுத் தந்தை' அமரர் திரு. வி.வீரசிங்கம் அவர்களின் 21-வது நினைவுதினக்கூட்டத்தில் யாழ். மாவட்ட சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் பேசுகையில் கூறினர்.

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். சிவமகராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

வடபகுதியைச் சேர்ந்த கூட்டுறவு சங்க உறுப்பினர் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ)

## இன்று

(யாழ்ப்பாணம்)

மக்சள் கலைஅரங்கம் தயாரித்துள்ள 'மனிதனும் மிருகமும், என்னும் நவீன நாடகம் இன்றுமாலை 7 மணிக்கு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.


## யாருடைய பணம்

இன்று (6 - 12 - 85) பகல் எமது ஸ்தாபனத்தில் ஒரு தொகைப் பணம் யாரோ கைதவறி விட்டுப்போய் விட்டனர். உரியவர் எம்முடன் தொடர்பு கொண்டு தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**நியூ விக்ரேஸ் எலேக்ரோனிக் கொம்பிளெக்ஸ்**
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532 (2225)

**மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்**




ஆரோக்கிய வாழ்வுக்கு
மில்க்வைற் மெடிக்கேட்டட் சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்.
**விலை ரூ. 3-00 மட்டுமே**
10 மேலுறைகளை அனுப்பி ஒரு அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

புத்தாண்டு மணக்க
**அண்ணு கோப்பி ஸ்தாபனத்தார்**
அளிக்கும்
**வெகுமதிகள்**
உங்கள் வாடிக்கைக் கடைகளில்
**அண்ணு NO. 1 கோப்பிகளை வாங்கி**
பைக்கற்றுக்குள்ளிருக்கும் கூப்பன்களைக் கொடுத்து
**வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்**

(1) 3கிலோ அண்ணு கோப்பிக்கு
1 எவர் சில்வர் கப்
(2) 2கிலோ அண்ணு கோப்பிக்கு
1 பிளாஸ்டிக் கப் அன்ட் சோசர்
(3) 1கிலோ அண்ணு கோப்பிக்கு
1 பிளாஸ்டிக் கப்
(4) 500 கிறும் ,, ,,
1 கொப்பி

1-12-1985 முதல் 28-2-1986 வரை முடியும் விற்பனைக்கே இப்பரிசில்கள் வழங்கப்படும்.

வெகுமதிகளை நேரில் பெற்றுக்கொள்ள வேண்டிய இடம்:
**அண்ணு கோப்பிக் கடை**
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
கடிதத் தொடர்பு:
**அண்ணு தொழிலகம் - இணுவில்**

## ஈட்டுவழக்கில் விற்பனவுக்கான

# அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில்

1. வேலுப்பிள்ளை வல்லிபுரமும்.
2. பெண் இரத்தினபூபதியும், இருவரும் உடுப்பிட்டி வடக்கு, உடுப்பிட்டி.

வழக்காளிகள்.

எதிராக

இல. ஈடு/16734

1. சண்முகம் இராசலிங்கமும்
2. பெண் இராசமணியும், வல்வெட்டித்துறை, தற்போது 11/8, தக்கியா லேன், திருகோணமலை.

எதிராளிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்பட்டும் ஆதனம் 1985-ம் ஆண்டு மார்கழி மாதம் 23-ம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்; வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டிக் கிராமம் ''அவையத்தபுலம்'' தோட்டம் 4. ஷை நிலபர. 52. ஷை நில பர. 30 கலட்டி நில பர. 61 1/8, ஷை வலைக் கலட்டி நில பர. 58 3/8, பூணுரகலட்டி நில பர. 58 3/8 ''அவையத்த புலத்து கிழக்கு கலட்டி'' நில.பர. 19½, முதலாவதாகக் குறிப்பிட்ட நாலு துண்டுகளிலும் தென்மேற்குப் பக்கமாக நில.பர. 20 ஐ நீக்கி மிகுதியான பாகமும் மற்றும் துண்டுகளும் அனுமதி பெற்ற நில அளவைக்காரன் ஜி. கணபதிப்பிள்ளை 26- 9- 1924- ல் தயாரித்த 4540-ம் இலக்கப்படத்தின்படி நில.பர. 234 குளி 14 13/32 ஆகும். இப்படம் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றின் 16861-ம் இலக்க வழக்கில் கோவை செய்யப்பட்டுள்ளது. குறித்த படத்தில் 2ம் துண்டாகக் காட்டியபாகம் நில.பர. 49 குளி 13 1/10 இப்பாகம் அனுமதிபெற்ற நில அளவைகாரன் திரு. கே. ஐயாறு 2- 5-64-ல் தயாரித்த 287-ம் இலக்கப்படத்தில் 8-ம் துண்டாகக் காட்டிய பாகம் நில. பர. 14 குளி.2. இந்த நில.பர. பதினன்கு குளி இரண்டுக்கும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். வடக்கு றேட்டு, மேற்கு குறித்த படத்தில் 7-ம் துண்டு, தெற்கு ஏ. சரவணமுத்து பெண் ஞானசவுந்தரிக்குரிய வாதனம், இவ்வெல்லைக் குட்பட்ட காணி அடங்கலும். இது பருத்தித்துறைக் காணிப் பதிவகத்தில் A.177/67 ல் பதியப்பட்டுள்ளது. குறித்த 287 ம் இலக்கப்படம் பிரசித்த நொத்தாரிஸ் கே. கே. பாலசுப்பிரமணியம் 1965- 8- 25 திகதி 3060-ம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய பிரிவிடல் உறுதியுடன் அணைக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| துரட்சித்தொகை ........... | ரூபா 21,500-00 |
| மேலும் ரூபா 10,000/-க்கு 10-5-1983 தொடக்கம் 19- 7- 1985 வரை 15 வீத வட்டி) | ரூபா 3,250-00 |
| மொத்தம் ........ | ரூபா 24,750-00 |
| ரூபா. 24750/-க்கு 20-7-1985 தொடக்கம் 23-12- 1985 வரை 12 வீத வட்டி— | ரூபா 1,237-50 |
| மொத்தம்....... | ரூபா 25,987-50 |

நீதிமன்றத்தால் ஏற்பட்ட
விலைப்பெறுமதி ரூபா 4,20,000/-

S. R. சிவகுமாரன்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
விலைமதிப்பாளர், பிரசித்த ஏலவிற்பனையாளர்.
[Commissioner of Sales, Valuer and Public Auctioneer.]

''உமாபதி''
நெல்லண்டை றேட்,
தும்பளை, பருத்தித்துறை.
1- 12- 1985. [2113]

## உள்ளூர் ஒளிபரப்பு: ஓர் அவசர கோரிக்கை

முன்பெல்லாம் யாழ். நகரில் மூலைமுடுக்கெல்லாம் ''ரியூசன்'' சென்ரர்கள் இருந்து வந்ததும், போட்டாபோட்டிக்கு அதற்கான விளம்பரங்கள் சுவரெல்லாம் ஒட்டப்பட்டிருப்பதும் வழக்கம். இதைக் கண்டு வெளியூர்களிலிருந்து வருவோர் ஆச்சரியத்துடனும் ஒருவித ''பொருமை'' நோக்குடனும் பேசிக்கொள்வதைப் பலதடவைகள் நாம் கேட்டிருக்கிறோம்.

இன்று அதே இடத்தைப் பிடித்துள்ளவை எது தெரியுமா? மினி சினிமாக்களே! முளத்துக்கு முழம் மினிசினிமாக்களும். சந்திக்குச் சந்தி அவற்றின் விளம்பரங்களும், நம் சமூகம் எங்கு சென்றுகொண்டிருக்கிறது, நமது இளம் மாணவ சமூகம் எங்கெல்லாம் இழுத்தடிக்கப்படுகிறதென்பதையே எடுத்துக் காட்டுகிறது.

பாடசாலைகளாகட்டும். கோவில்களாகட்டும், அரச வெளியார் அலுவலகங்களாகட்டும் எதையும் பொருட்படுத்தாது. இரவென்றும் பகலென்றும் பாராது, எந்த நேரத்திலும் ,மினிசினிமாக்கள்' இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் படக்காட்சியின் பாடல்களும், கதைவசனங்களும் ஒலிபெருக்கி மூலம் காது செவிடுபடும்படி ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருப்பதே! மாணவர்களின் படிப்பும், கோவில்களின் அமைதியும், அலுவலகளின் வேலையும், ஏன்! சாதாரண மக்களின் சூழலுமே எவ்வாறு குழப்பப்பட்டு, சிதைக்கப்படுசின்றன என்பதை இவர்கள் சிந்தித்ததுண்டா?

இத்தனைக்கும் மேலாக ஒரு காலத்தில் சிறந்த மாணவ சமூகத்தை உற்பத்தி செய்து தந்து கொண்டிருந்த எமது மண், இன்று சில நயவஞ்சகர்களால்திட்டமிட்டுக்குழப்பியடிக்கப்பட்டு வருவதை அனுபவ ரீதியாகக் கண்டு கொண்டிருக்கிறோம். இவ்வேளையில், எம்மையும் எமது இளம் சமுதாயத்தையும் சமயோசிதபுத்தியுடன் காப்பாற்றவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமையல்லவா?

இன்று நடப்பதென்ன? நேரங்காலமின்றி டி. வி. யை முடுக்கிவிட்டுத் தரங்கெட்ட படங்களையெல்லாம் கண் கொட்டாது பார்த்து அனுபவிக்கும் மாணவ குழாம், தமது கல்வியையும் பாழாக்கி, கண் ஊயும் கெடுத்துக் கொள்ளும் கண்ணராவியைக் கண்டும் காணாததுபோல் எத்தனை காலத்துக்கு இருப்பது?

பரீட்சைக் காலங்களில் அதிலும் ஜி. சி. ஈ. பரீட்சை இன்று தொடங்கும் வேளைகளில் தானும் இவ்வித ஒளிபரப்புக்களை நிறுத்தக் கூடாதா? விடுமுறை காலங்களிலோ, கிழமை முடிவுதினங்களிலோ அல்லது குறிப்பிட்ட பண்டிகை தினங்களிலோ மட்டுமே படங்கள் ஒளிபரப்பட்டும் என்ற கட்டுப்பாட்டினைத் தான் கடைப்பிடிக்கக் கூடாதா?

-மாணவன்

## அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

''யாழ் மறை மாவட்ட பிரஜைகள் குழு'' சார்பில், பிறமாவட்டங்களில் இருந்து ஊர்காற்றுறைக்கு அகதிகளாக வந்தவர்களுக்கு பொருட்கள் வழங்கப்பட்டன.

கரம்பன் அர்ச், செபஸ்ப்தியார் தேவாலாத்தின் பங்குக் குரவர் வண. லோறன்ஸ் சேவியர் தலைமையில் திருமலை, மன்னர், வவனியா ஆகிய இடங்களிலிருந்து அகதிகளாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் இருக்கும் மக்களுக்கு, உணவு துணிமணிகள் அடங்கிய பார்சல்கள் வழங்கப்பட்டன. (வி)

### சாவகச்சேரி நகராட்சிமன்றம்

## 1986-ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1986 தொடக்கம் 31-12-1986 வரையிலான காலப்பகுதிக்குள் கீழ்க்குறிப்பிடுவனவற்றிற்கான கேள்விகள் இரு பிரதிகளில் 18-12-85ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வியாபாரம் | கடை இல, | சென்ற வருடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.3 | 65000-00 | 1000-00 | 50-00 |
| 2. மாட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.4 | 65000-00 | 1000-00 | 50-00 |
| 3. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.1 | 32000-00 | 1000-00 | 50-00 |
| 4. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ்.2 | 32000-00 | 1000-00 | 50-00 |

மேற்படி வைப்புப் பணமும், கேள்விப்படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 17-12-85ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் திருப்பித் தரப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் திருப்பித் தரப்படும். கேள்வி வைப்புப் பணமும், படிவக் கட்டணமும் ரொக்கமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. நவரத்தினராசா,
தலைவருக்காக,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி, 03-12-1985. (2202)

பவர்ஸ் உரம்
அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்
ரூபா 2,000/- க்கும மேல்
ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்
5, மேல் சத்தம்ஸ் வீதி,
கொழும்பு-1.

# "நடமாடும் சுதந்திரமும் பறிபோகும் நிலையில்..."

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணப் பிரதேச மக்கள், இன்று நடமாடும் சுதந்திரத்தையும் முற்றாகப் பெற்றிராத இவ்வேளையில், சமயப்பணிகள் தொடர்வது பாராட்டத்தக்கது. இன்று நம்மிடையே சமய வேறுபாடுகள் கிடையாது, இந்துவாக உள்ள நான் இன்று யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை பெயரிடப்பட்ட விளையாட்டரங்கைத் திறந்து வைப்பதில் பெருமையடைகிறேன். தம்மை நாடிவரும் அனைவரையும் காப்பாற்றிவரும் யாழ். ஆயர் அவர்களை தமிழினம் என்றுமே மறக்காது. தைரியமாக வாழ நாம் பழகிக்கொள்ளவேண்டும்.''

இவ்வாறு, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டரங்கினைத் திறந்து வைத்துப் பேசுகையில் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ் யோசப் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 50-வது விழா நினைவாக அமைக்கப்பட்ட மாணவர் விடுதிக்கு இக்கல்லூரியில் 16 வருடங்கள் கடமையாற்றிய அடிகள் 'தோமஸ்' அவர்களது பெயர் சூட்டப்பட்டு சட்டிடத்தை யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை திறந்து வைத்தார்கள்.

யாழ். ஆயர் தமது உரையில்; 'மாணவர்கள் சுகதேகிகளாக இருப்பதற்கு விளையாட்டு அவசியம். நமது முன்னோர்கள் நிலங்களைக் காப்பாற்றி வைத்ததினால் இன்று அவை எம் மாணவர்களுக்குப் பயன்படுகின்றன' என்றார்.

இக் கல்லூரியில் 32 வருடங்கள் கடமை புரிந்துபின் நோய் வாய்பட்டு இரண்டு கால்களையும் இழந்த திரு. இராயப்பு என்பவருக்கு 3 சக்கர நவீன வண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டது. விடுதி மாணவர்களுக்கான பரிசுகளையும் யாழ். மாநகரசபை ஆணையாளர் வழங்கினார்.

விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர், யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகத்தர் திரு. எஸ். மரியதாஸ் சில விளையாட்டு உபகரணங்களை யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. எஸ். சந்தியா பிள்ளையிடம் கையளித்தார்.

---

# இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 22 (1985-12-7)
கிழமை- சனி
திதி- தசமி முன் இரவு வரை
நக்ஷத்திரம்- அத்தம் முன் இரவு வரை

மேடம்: நண்பர்களுடன் கருத்துவேற்றுமை உருவாகும். வியாபாரிகளாயின் பங்காளிகளுடன் பகைத்துக் கொள்ளவேண்டாம். பொருள் செலவு உண்டு.

இடபம்: தெய்வநம்பிக்கை மேலோங்கி நிற்கும். சிலருக்கு ஆத்மீக விடயங்களில் ஆதிக ஆர்வம் ஏற்படலாம். பொது மக்களின் ஆதரவும் உண்டு.

மிதுனம்: வியாபாரத் துறையில் ஈடுபடுபவர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். எதிர்பார்த்தவிடயத்தில் நஷ்டமேற்படலாம். நண்பராலும் நன்மையுண்டு.

கடகம். வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

சிங்கம்: வாய்வுக்கோளாறு உடல்நலத்தைப் பாதிக்கலாம். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். தானிய நஷ்டத்திற்கிடமுண்டு.

கன்னி: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத்தடுக்கும். மன வேதனையுண்டு. திடசித்தம் வேண்டும்.

துலாம்; குடும்பத்தில் மகிழ்ச்சி பிறக்கும். நீண்ட அபிலாஷை இன்று நிறைவேறும். உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன்வருவார்கள்.

விருச்சிகம்: அமைதிக்குப் பங்கம் ஏற்படும். சம்பவங்கள் ஏற்படலாம்- நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல் நலம் பாதிக்கப்படலாம். செலவுக்கும் இடமுண்டு.

தனுசு: கடந்த கால நினைவுகள் உங்களுக்குக் கவலையைத் தரலாம். விவசாயிகளாயின் இன்று ஒரு சோதனைக் காலமாகும். பிறர்மீது அதிக நம்பிக்கை வைப்பதைத் தவிர்க்கவும்.

மகரம்: சூழ்நிலையில் நல்ல மாறுதல் தென்படும். அமைதியான வாழ்க்கையுடன் தெய்வத்தின் அருளும் தாராளமாகக் கிடைக்கும். புத்திர வழிச் சுகம் உண்டு.

கும்பம்: பூமிப் பிணக்குகளால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். வாகனம் செலுத்துவோர் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

மீனம்: உள்ளத்தில் உவகைக்கூத்து. உறவினர்கள் வருகை உற்சாகத்தை அளிக்கும். மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும்.

# திருமலை வே. ரவீந்திரன்

---

## சட்டவிரோத

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. மேலும் மின்னைப் பெறுதலில் முன்னெச்சரிக்கை அற்றவிதமாக முள்ளுக் கம்பிகளிலும் சாதாரண ஒரு கம்பியிலும் மின்னைப் பெறுவதுவதினால் பல உயிரிழப்புகள் கூட சம்பவிக்கின்றன. சில இடங்களில் சட்டவிரோதமாக பெற்ற மின்னால் ஆட்டுக் கொட்டிலும் மாட்டுக் கொட்டிலும் தோட்டமும் இரவு பகலாக ஒளியூட்டப்படுகின்றது.

''எனவே நாம் தமிழீழமக்கள் என்ற முடிவோடு இம் மண்ணின் ஒவ்வொர் தேவையிலும் அக்கறையாயிருந்து செயற்படுதல் முக்கியமானது. மின்சார சபை அத்தியாவசியமான மின்னை உடனே சட்டமாக கொடுத்து ஒத்துழைத்து இச் சட்டவிரோத மின்பாவனையை தடுக்கவேண்டும். பல் வேறிடங்களில் இது பொறுப்புடன் நிறைவேற்றப்படுகின்றது. இவ்விடயத்தில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் (ஆம்! எவர் ஒருவரும்) புரிந்துகொள்ளலோடு நடந்து கொள்ள வேண்டும். மின்சாரத்தை போன்றே ஏனைய அனைத்து விடயங்களிலும் எம் மக்கள் புரிந்துணவோடு நடந்துகொள்வது மிக முக்கியமான்து.

---

(யாழ்ப்பாணம்)

திநெல்வேலி சைவ அனாதைகள் இல்லத்தில் தங்கியிருப்போருக்கு உடு புடவைகள் வாங்குவதற்காக, இலங்கை புகையிலைக்கம்பனி ஆயிரம் ரூபாவுக்கான காசோலையை வழங்கியுள்ளது. [மா]

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை 1986-ம் ஆண்டுக்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

1986-ம் ஆண்டுக்கு (அ) இருப்பிலிருந்தும் (ஆ) இறக்குமதி செய்தும் பின்வரும் பொருட்களையும் சேவைகளையும வழங்குவதற்குத் தாமாகவே பதிவுசெய்ய விரும்பும் இலங்கையிலுள்ள வியாபார நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள், முகவர்கள், தனி ஆட்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பங்கள் ''1986 ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களைப் பதிவுசெய்தல்'' எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு 1985-12-20 தேதியில், அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் இணைப்படியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) குறிக்கப்பட்ட ஒவ்வொரு பொருட்கள் சேவைகளின் இனம் தொடர்பாக வெவ்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இப்பல்கலைக்கழகத்துடன் 1985 ஆம் ஆண்டுக்காகப் பதிவுசெய்துள்ள வழங்குநர்கள் 1986 ஆம் ஆண்டுக்கும் புதிய விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் மீளளிக்கப்படாத பதிவு செய்தற்கட்டணத்திற்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெயருக்கு எழுதப்பெற்ற 25 ரூபா பெறுமதியான காசோலை / காசுக்கட்டளை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

(5) வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையைப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளதுடன் அதனது தீர்மானம் இறுதியானதாகும். கூறுவிலைகளைக் குறித்ததன் பின்னர் வழங்கல் செய்யத்தவறும் அல்லது கட்டளையிட்டதன் பின்னர் அவற்றை உரிய காலத்தில் ஒப்படைக்கத் தவறும் அல்லது மாதிரிகள் விபரக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கு இசைவற்ற வழங்கல்களைச் செய்யும் வழங்குநர்கள் அறிவித்தலின்றி வழங்குநர்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படுவர்.

(6) பின்வரும் தகவல்கள் உட்பட எல்லா விபரங்களையும் விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) பொருட்கள் சேவைகளின் வழங்கல்கள் (பொருட்கள், இறக்குமதி/இருப்பிலிருந்து வழங்குதல்)
(ஆ) தனிப்பட்ட / வியாபார நிறுவனத்தின் பெயரும் முகவரியும்
(இ) தொலைபேசி இலக்கம் - தந்தி முகவரி
(ஈ) வியாபார நிறுவனத்தின் இயல்பு (தனி உரிமையாளர், பங்குடமை, பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஆகியவற்றில் எது எனக் குறிப்பிடவும்)
(உ) பதிவு இலக்கம் (வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பின்)
(ஊ) வங்கியாளர்கள் பெயர்கள்
(எ) விசாரிக்கக்கூடிய வழிகள் (ஏதாவது இருப்பின்)
(ஏ) கிடைக்கத்தக்க கடன் வசதிகள்

எல்லா உரிய விபரங்களை அளிக்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## பொருட்கள் வழங்கல்

(1) எழுது கருவிகள்
(2) அலுவலக உபகரணம்
(3) அச்சிடல்
(4) பாடக்குறிப்புக்களை இரட்டித்தல்
(5) எல்லாவகையான அச்சடித்தலுக்குமான கடதாசிகளும் ஏனைய பொருட்களும்
(6) அச்சுப்பாளம், இறப்பர் பொறிகள், பித்தளை அடையாளங்கள் முதலியன
(7) அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கூட்டல் இயந்திரங்கள், கணிப்பு மானிகள், இரட்டித்தல் இயந்திரங்கள்)
(8) நூல்களும் பருவ இதழ்களும்
(9) தளபாடம்
(10) மரம்
(11) கட்டிடப் பொருட்கள்
(12) கடின உலோகப் பொருட்கள்
(13) குழாய்களும் வடிகால் உபகரணங்களும்
(14) துட்புரவேற்பாட்டுப் பொருட்கள்
(15) மின்சார உபகரணங்களும் உதிரிப்பாகங்களும்
(16) இலத்திரன் இணையுறுப்புக்கள்
(17) இயந்திர சாதனங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள்
(18) எல்லாவகையான வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள்
(19) ரயர்கள், ரியூப்கள், பற்றறிகள்
(20) ஆய்வுகூட உபகரணங்களும் இரசாயனப்பொருட்களும்
(21) விளையாட்டு நலப் பொருட்கள்
(22) சீருடைகள், சப்பாத்துக்கள், மழை அங்கிகள், பசை தடவி விறைப்பாக்கி, நெடுஞ்சப்பாத்துகள், குடைகள், தோற்பொருட்கள் ஆகிய சீருடைக்கான பொருட்கள்
(23) மட்பாண்டப்பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்
(24) கலயச்சாளர்களுக்குத் தேவையான உபகரணங்களும் ஏனையபொருட்களும்
(25) நிழற்படச் செய்முறைக்கான இருட்டறை உபகரணங்களும் இரசாயனப் பொருட்களும்.
(26) நிழற்படம் உருவாக்குவதற்குத் தேவையான உதரிப்பாகங்கள்
(27) புத்தகம் சட்டுவதற்கான உபகரணங்கள்
(28) தோட்டச் செய்கைக்கான உரங்கள், இரசாயனப் பொருட்கள், உபகரணங்கள்

## சேவைகள்

(29) அலுவலக உபகரணங்களைப் பழுதுபார்த்தல்
(30) சிவில் பொறியியல் பழுதுபார்த்தல், நிர்மாணித்தல் உட்பட கட்டட வேலைகள், வீதியமைத்தல் ஆகியன
(31) எல்லாவகையான வாகனங்களும் பழுதுபார்த்தல்
(32) போக்குவரத்துச் சேவைகள்
(33) வடிகால், நீர்க்குழாய் அமைப்புக்களை பழுதுபார்த்தலும் காப்புக் காவல் செய்தலும்
(34) புத்தகங்களையும் பருவ இதழ்களையும் கட்டுதல்
(35) சதிரை பின்னுதல் உட்பட தளபாடங்களைப் பழுதுபார்த்தல்
(36) ஆய்வு கூடங்களில் பயன்படுத்துவதற்கான தாவரங்கள் பொருட்கள், மனித உடல்கள், மிருகங்கள் ஆகியவற்றை வழங்கல்
(37) இறக்குமதி செய்யப்படும் பொருட்களை அகற்றுதல்
(38) எல்லாவகையான குளிர்சாதனப்பெட்டிகளையும், குளிரூட்டி இயந்திரங்களையும் இணைத்தலும் பழுதுபார்த்தலும்.

பதிவாளர்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

2204

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## சுங்க அதிகாரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழு ஆயிரம் அமெரிக்கடாலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிங்கப்பூரிலிருந்து 55 லட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இலங்கைக்குக் கடத்தி வந்த அவுஸ்ரேலியப் பிரஜை ஒருவருக்கு ஒரு கோடியே அறுபது லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ரா)

# ''இலங்கைத் தமிழரை வெளியேற்ற வேண்டாம்!''

(பிராங்க்போர்ட்)

''ஜெர்மனியிலிருந்து இலங்கைத் தமிழர்களை வெளியேற்றக்கூடாது'' என்று ஜெர்மனிய கிறீன் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜெர்மன் அரசு கருதுவது போல இலங்கையில் உள்ளோர் யுத்தம் இடம்பெறவில்லை என்றும், இலங்கையில் தமிழர்கள் பழிவாங்கல் சம்பவங்களே நடக்கின்றன என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகள் இலங்கைத் தமிழர் விஷயத்தை எவ்வாறு அணுகலாம் என்று யோசனை செய்து வருகின்றன. இவர்களின் கூட்டான முடிவுகள் தமிழர்களுக்குப் பாதகமாக அமைந்து விடுமோ என்று அந்த ஜெர்மனிய 'கிறீன்' கட்சி கவலை தெரிவித்துள்ளது. (இ. .பி)

## சபாஷ் வட...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிகள் பரிசுகளைப்பெற்றுள்ளனர்!

பரிசு பெற்றோர் விபரம்: 1ம் பரிசு (500ரூபா) செல்வி கீதா சனகசபாபதி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. 2ம் பரிசு (250 ரூபா) செல்வி எஸ். இராசேஸ்வரி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. 3ம் பரிசு (100 ரூபா) செல்வி பி. ஸ்ரீடவானி தேவரையாளி இந்துக்கல்லூரி கரவெட்டி.

சுவரொட்டிப் போட்டி நடத்தப்பட்டதாயினும் தரமான விண்ணப்பம் கிடைக்காமையினால் பரிசுக்கு எதுவும் தெரிவாகவில்லை. (க)


## மரண அறிவித்தல்
### வீரவாகு சிவசுப்பிரமணியம்



வீரவாகு சிவசுப்பிரமணியம் காலமானார். இவர் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும், டாக்டர் தியாகராசா (கிருஷ்ணு), யோகேஸ்வரன் (குமார்), சிவகுமார் (ராஜன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரம்யா, சாவித்திரி, தமரா, ஆகியோரின் மாமனாரும், ஜனகன், யோகன், ஷானவி, ஆயோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு 7, டெரஸ் 4வது இலக்க வாசஸ்தலத்திலிருந்து இன்று (7-12-1985) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனத்தைப் பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு 4 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும். [2220]

## மரண அறிவித்தல்



### E. K. சண்முகநாதன்

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள் 4-12-85 அன்று நைஜீரியாவில் காலமானார். இவர் முன்னாள் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியினதும், யாழ். மத்திய கல்லூரியினதும் அதிபரும், இளைப்பாறிய கல்விப் பணிப்பாளரும் (கல்வி அமைச்சு). இவர் செல்வராணியின் அன்புக்கணவரும், சண்முகேந்திரன் (தேசிய பாற்சபை), செல்வேந்திரன் (U. K.) சிவேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகலட்சுமி நவரத்தினராசாவின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற நிலஅளவையாளர் தம்புவின் மருமகனும், பஞ்சாட்சரம் (சிங்கப்பூர்) செல்வராஜா (Asbestos), தேவராஜா (நில அளவையாளர்), ஆனந்தராஜா (மகாராஜா நிறுவனம்), ரவீந்திரராஜா (Citizen Trades), வசந்தாதேவி, இந்திராணி (கூட்டுறவுப் பரிசோதகர்) ஆகியோரின் மைத்துனரும், சுதனதீரன் (கணக்காளர்), கதிரவேலு (ஆசிரியர்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நைஜீரியாவில் 7-12-85 சனிக்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். 7-12-85 சனிக்கிழமை கோப்பாயில் பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அஞ்சலி நடைபெறும்.

''வசந்தி'',
மாதா கோவில் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு.

(2222)

## இது ஒரு அவசரச்செய்தி

[யாழ்ப்பாணம்]

இன்று ஆரம்பமாகும் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் நாகேஸ் நாகேஸ்வரன் என்பவரின் அனுமதிப்பத்திரம் வண்ணார்பண்ணை தென்மேற்கு கிராம சேவையாளர் எம். ஆரோக்கியநாதர் முகவரிக்கு வந்துள்ளது. சுட்டிலக்கம்: 17 Z 19464. பரீட்சை நிலையம்: சுண்டுக்குளி. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார். (மா]

## விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் வந்த ஒருவர் தனியார் வாகனத்தினால் மோதப்பட்டு, தலையில் ஏற்பட்ட காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

யாழ். புங்குடுதீவு வீதியில் உள்ள வங்களாவடிச் சந்தியில் நேற்றுக்காலை இவ்விபத்து நடந்தது.

இந்நபர் வேலணை மேற்கு வாசியான சுந்தரம் சிவபாலசுந்தரம் (34 வயது) என்பவராவார். (ஐ)

## சாக் மாநாடு

[டாக்கா]

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் (சாக்) முதலாவது உச்சி மாநாடு. இன்று பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் ஆரம்பமாகிறது.

இப்பதிரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## பணிவான வேண்டுகோள்

நல்லூர் 42 சட்டநாதர் வீதியிலுள்ள காலஞ்சென்ற பிரபல நொத்தாரிசு கி. துரைசிங்கம் அவர்களின் இல்லத்திலிருந்து இனந்தெரியாத நபர்களினால் எனது Honda CD 225 மோட்டார் சயிக்கிள் இலக்கம் 86 ஸ்ரீ 8086 எடுத்துச் செல்லப்பட்டது. ஒரு கிழமையில் திருப்பித் தருவதாகக் கூறியும் ஆறு மாதங்கள் ஆகியும் எதுவித தகவலுமில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் கருணை கூர்ந்து மோட்டார் சயிக்கிளை திருப்பி ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

து. இரவீந்திரன்

42, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (2224)

## மரண அறிவித்தல்
### திருமதி சுகிர்தரட்ணம் மாகிறட் ஸ்பென்சர்

6-12-85 அறிவித்தலின்படி அன்னாரின் மரண ஆராதனை அவரது இல்லத்தில் காலை 10-00 மணிக்கு நடைபெற்று நல்லடக்கம் கொட்டடி சேமக்காலையில் நடைபெறும்.

66, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(2219)

## மரண அறிவித்தல்
### திரு. சிதம்பரநாதன் கந்தையா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு வாசியுமான சிதம்பரநாதர் கந்தையா (சிறுப்பர்) சிவபதமெய்திவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரன், இராமேஸ்வரன், ஜெகதீஸ்வரன், பரமேஸ்வரன், கணேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மேகலா, மங்களகௌரி, உத்தமி, இராஜேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், இரத்தினசபாபதி, காலஞ்சென்ற சுயம்புலிங்கம், இராசம்மா, செல்வலட்சுமி, புவனேஸ்வரி, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகநாதன், கேதாரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 7-12-85 சனிக்கிழமை (இன்று) பகல் 12 மணிக்கு வேலணை மேற்கில் நடைபெறும்.

தகவல்: இராமேஸ்வரன்,
(2216)

## மரண அறிவித்தல்
### திருமதி தனேஸ்வரி இராசரட்ணம்

தனேஸ்வரி இராசரட்ணம் காலமானார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், திருமதி சர்வேஸ்வரி மாசிலாமணி, திருமதி இராஜேஸ்வரி வேலாயுதபிள்ளை, திருமதி விக்கினேஸ்வரி தெய்வேந்திரம், திரு. சி. வாமதேவன் (இளைப்பாறிய இலங்கை வங்கி உதவி முகாமையாளர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற எஸ். மாசிலாமணி, திரு. E. R. வேலாயுதபிள்ளை (J, P.) S. தெய்வேந்திரம், திருமதி கமலாதேவி வாமதேவன் ஆகியோரின் மைத்துணியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7-12-85 சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்: சி, வாமதேவன்,
திருநெல்வேலிச் சந்தி,

[2212]

## மரண அறிவித்தல்
### ஏ.டி.ஆர்.(ADR) இரத்தினராசா

(முன்னாள் காட்டுமர இலாகா உதவி அதிபர்)

தற்பொழுது 99 பிரத்தியேக இறக்குமதி, ஏற்றுமதி கொம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர். Managing Director. இவர் அமரர்களான காலஞ்சென்ற திரு/திருமதி S. A. இராஜரட்ணம் அவர்களின் புதல்வனும், சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திரவியமலர் அவர்களது அன்புக் கணவரும், விஜித், ஏகன், யூகன் ஆகியவர்களது பிரிய தந்தையும், சாவகச்சேரி பிரபல சட்டத்தரணி திரு. எஸ். கே. திரவியநாயகம் ஜே. பி. யு. எம். அவர்களது அருமை மருமகனும் ஆகிய ஓய்வுபெற்ற, காட்டுமர இலாகா உதவி அதிபர் திரு. அல்டேட் டானியேல் இராசரத்தினம் இரத்தினராசா அவர்கள் [5- 12- 85] வியாழக்கிழமை பி. ப. 6 மணியளவில் இறைவனடி சேர்ந்துள்ளார். அவரது பிரேத சேம ஆராதனை இல. 7, குவாறி வீதி, தெகிவளையில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அவரது பிரிவால் துயறும்,
மனைவி, மக்கள், மாமன்.

[2214]